இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com
www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 31, 06 செப்டம்பர் 2024 இதழ்:- 14

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உண வளிக்க முன்வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 13 வருடங்களாகத் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## ஆதரவை விலக்கியது NDP! ட்ரூடோ அரசிற்கு நெருக்கடி!



கனடாவில பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான சிறு பான்மை லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வந்த புதிய ஜன நாயகக் கட்சி தனது ஆதரவை விலக்குவதாக அறிவித்துள்ள நிலையில் எந்த நேரமும் அரசாங்கம் கவிழலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஜக்மீத் சிங் என்பவர் தலைமையில் இயங்கும் புதிய ஜனநாயகக் கட்சியே அரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றுள்ளது. ஆனால் ஆட்சிக்கு ஆபத்து அல்லது தேர்தல் உருவாகும் சூழல் எதுவும் தற்போது ஏற்பட வாய்ப்பில்லை என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (4ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## சஜித்தை தமிழரசுக்கட்சி ஆதரிக்க முடிவு செய்ததால் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது ரணில் தடுத்து விட்டார் - சுமந்திரன்

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது இறுதித் தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுத்துள்ளதன் மூலம் அவர் ஒரு இனவாதி என்பதை நிரூபித்துள்ளதுடன், தமிழர்களை பழி வாங்கியும் விட்டார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் 03 செப்டம்பர் 2024 விசேட (6ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

## தமிழரசுக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சஜித்தை ஆதரித்தவர்கள் யார்? விபரம் 3ம் பக்கம்

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX
ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



21 Years Real Estate Experience

## Siva Kandiah
Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

Team SIVA

WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**

Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED

*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**

11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7


NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd


**Oshawa** $275,000

0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!

### Danforth Ave & Victoria park


**East York** $410,000

1 Beds • 1 Bath • 4 Rooms
Fully Renovated unit

### Neilson/Tapscott



**Malvern** $460,000

2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Adelaide St & Simcoe St



**Toronto** $680,000

1+1 Beds • 1 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

### Sheppard & Neilson


**Malvern** $699,900

3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

### HWY 48 & High Street



**Georgina** $774,900

3 Beds • 3 Baths • 7 Rooms
Brand New Never Lived Home

### McLevin Ave & Morningside



**Malvern** $799,000

3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Mavis Rd / Eglinton Ave



**Mississauga** $859,000

3 Beds • 3 Baths • 8 Rooms
Finished Basement

### Garner Rd E & Raymond Rd



**Hamilton** $899,999

3 Beds • 5 Baths • 10 Rooms
Hardwood flooring throughout

### Church St N & Rossland Rd W



**Ajax** $950,000

3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Townline Rd & Shankel Rd



**Oshawa** $1,099,900

3 Beds • 4 Baths • 8 Rooms
Finished Basementt

### Bristol Rd / Terry Fox Way



**Mississauga** $1,119,999

3 Beds • 4 Baths • 9+1 Rooms
Easy commutes to the 401,403

### Midland Ave/ Eglinton Ave


**Scarborough** $1,150,000

3 Beds • 2 Baths • 6+1 Rooms
Hardwood flooring throughout

### Hwy 48/Castlemore
FOR LEASE



**Markham** $3,950

4 Beds • 3 Baths • 6 Rooms
1 Min to Mount Joy Go Train Station

### Staines/Finch
FOR LEASE


**Scarborough** $3,700

4 Beds • 3 Baths • 7 Rooms
1 Min away to public school

### Hwy 7/Warden
FOR LEASE


**Markham** $2,400

1+1 Bed • 2 Baths • 4+1 Rooms
Open concept layout

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# தமிழரசுக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும் அவர்களது ஆதரவு நிலைப்பாடும்

கடந்த வாரம் வவுனியாவில் நடை பெற்ற தமிழரசுக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சுமார் நான்கு மணி நேரத்திற்கு நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களு க்குப் பின்னர் மத்திய குழு உறுப் பினர்கள் எடுத்த நிலைப்பாட்டையே மேலேயுள்ள அட்டவணையில் காண் கின்றீர்கள்.

| இல | முழுப்பெயர் | மாவட்டம் | தொலைபேசி இல | சஜித் பிரேமதாசவை ஆதரித்தோர் | தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்தோர் | மௌனம் காத்தோர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.கந்தையா சிவஞானம் | யாழ்ப்பாணம் | 077 116 6121 | | | ✓ |
| 2 | மருத்துவர்.பத்மநாதன் சத்தியலிங்கம் | வவுனியா | 076 393 2762 | ✓ | | |
| 3 | கௌரவ.மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் | யாழ்ப்பாணம் | 077 731 4628 | ✓ | | |
| 4 | திரு.ஆசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் | யாழ்ப்பாணம் | 077 861 7740 | ✓ | | |
| 5 | கௌரவ.இராஜபுத்திரன் சாணக்கியன் | மட்டக்களப்பு | 072 288 8801 | ✓ | | |
| 6 | திரு.தவராசா கலையரசன் | அம்பாறை | 077 555 7407 | ✓ | | |
| 7 | திரு.சண்முகம் குகதாசன் | திருகோணமலை | 076 830 1271 | | ✓ | |
| 8 | திரு.வல்லிபுரம் கமலேஸ்வரன் | முல்லைத்தீவு | 077 919 7587 | ✓ | | |
| 9 | திரு.அரியகுட்டி பரஞ்சோதி | யாழ்ப்பாணம் | 077 645 0292 | | | ✓ |
| 10 | திரு.தம்பிராசா குருகுலராசா | கிளிநொச்சி | 077 327 3629 | | ✓ | |
| 11 | திரு.சிவப்பிரகாசம் சிவமோகன் | முல்லைத்தீவு | 077 209 3213 | ✓ | | |
| 12 | திரு.வேலாயுதபிள்ளை தவராசா | கொழும்பு | 077 737 0516 | | | AB |
| 13 | திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா | முல்லைத்தீவு | 077 418 8975 | ✓ | | |
| 14 | திரு.கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் | மட்டக்களப்பு | 071 849 7158 | ✓ | | |
| 15 | திரு.கந்தசாமி செல்வராசா | திருகோணமலை | 077 601 4737 | | ✓ | |
| 16 | திரு.துரைராசா தேவராசா | வவுனியா | 077 978 7322 | ✓ | | |
| 17 | திரு.ஆஜெபீற்றர் இளஞ்செழியன் | முல்லைத்தீவு | 077 204 5444 | ✓ | | |
| 18 | திரு.சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன் | கிளிநொச்சி | 077 886 2556 | | ✓ | |
| 19 | திரு.கேசவன் சயந்தன் | யாழ்ப்பாணம் | 077 260 2605 | ✓ | | |
| 20 | திரு.சின்னையா இரத்தினவடிவேல் | கொழும்பு | 077 755 4494 | ✓ | | |
| 21 | திருமதி.இரஞ்சினி கனகராசா | மட்டக்களப்பு | 077 050 0572 | ✓ | | |
| 22 | திரு.தியாகராசா சரவணபவன் | மட்டக்களப்பு | 077 329 0546 | ✓ | | |
| 23 | திரு.கந்தையா கனகசிங்கம் | திருகோணமலை | 077 873 0736 | | ✓ | |
| 24 | திரு.நாகலிங்கம் சேனாதிராசா | வவுனியா | 077 077 0946 | | | ✓ |
| 25 | திருமதி.வனிமதி சுபாகரன் | முல்லைத்தீவு | 077 592 4636 | | | ✓ |
| 26 | திரு.இம்மானுவேல் ஆனோல்ட் | யாழ்ப்பாணம் | 077 354 0155 | ✓ | | |

இதேவேளை வவுனியாவில் இடம் பெற்ற கூட்டம் தொடர்பான அறிவித் தல்கள், நிகழ்ச்சி நிரல் பல நாட்களுக்கு முன்னரே மத்திய குழு உறுப்பினர் களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் தான் தலைவரான மாவை சேனாதிராஜா தமக்கு சுகமில்லை. ஒன்றுமே தெரியாது எனக் கூறுவதும், சார்ள்ஸ் நிர்மலநாதன், சிறீதரன் ஆகி யோர் லண்டன் சென்றிருப்பதும் தற் செயல் நிகழ்வுகளல்ல. கட்சிக்குள் மிகவும் காத்திரமான ஆதரவு சஜீத் இற்கு இருப்பது இவர்களுக்கு நன்கு தெரியும்.

ஒரு புறத்தில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கோரிக்கையை ஆதரித்து புலி கள் ஆதரவு சக்திகளைத் திருப்திப்படு த்துவதும் புலம் பெயர் தமிழ்மக்க ளிடம் தேசப்பற்றாளர்களாகக் காட்டிக் கொள்வதும் மறு பக்கத்தில் கட்சிக் குள் காணப்படும் முடிவுகளை ஆதரிப் பதும் பெரும் வில்லங்கமாகவே இவர் களுக்கு இருந்திருக்கும்.

உட்கட்சி மோதல்கள் இடம் பெற்ற போது சிறிதரன் தனக்கு வழக்கைக் கையாள சிறந்த சட்டத்தரணியை ஒழுங்கு செய்து தர முடியுமா என ஜனாதிபதி ரணிலுடன் பேசிய விடயம் தொடர்பாக ஏற்கனவே உங்கள் அபி மான ஈழநாடு செய்தி வெளியிட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியானது




ஈழத் தமிழர்களாகிய நாம் இலங் கைத் தீவில் தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனமாகவும், தேசமாக வும் வாழ்ந்து வருகிறோம். வரலா ற்றுக்கு முற்பட்ட காலத்தில் இரு ந்து ஆயிரக்கணக்கான ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட, மரபு வழித் தாயகத்தைக் கொண்ட, தனித்துவமிக்க பண்பாட்டைக் கொண்ட ஒரு தேசம் ஆவோம் இலங்கைத் தீவு பல்லின, பலமத, பல மொழி, பல் கலாசாரத்தைக் கொண்ட ஒரு தீவாகும். இலங்கை த்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக கொள்ள மறுத்ததன் விளைவே இனப்பிரச்சினை தோற் றம் பெறுவதற்கும் கூர்மை அடை வதற்கும் இறுதியில் விஸ்வரூபம் எடுப்பதற்குமான மூல காரண மாகும். தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்கும் செயற்பாடு களே இன அழிப்பாகுமென தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரிவித்துள்ளது.

03 செப் 2024 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் அலுவலகத்தில் தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் , தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகிய ஏழு கட்சி களும் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த அரசியற் செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகங்கள், அரசசார்பற்ற அமைப்புகள், தொழிற்சங்கங்கள், கிராமமட்ட அமைப்புகள், தொழில் சார் அமைப்புகள் கூட்டுறவு அமைப்புகள், மாணவ அமைப்பு கள் இணைந்து உருவாக்கிய மக்கள் அமைப்பாகிய தமிழ்மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கிய ஒரு கட்டமைப்பே தமிழ்த்தேசியப் பொதுக் கட்ட மைப்பு ஆகுமென விளக்கமளிக்க ப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைக் காணும் பொருட்டு சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அவர்கள் தங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு ஒரு பொது வாக்கெடுப்பு அவசியம் .தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த வர்களைக் கௌரவிக்கும் வகை யில் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது தமிழ் மக்களின் தேசியக் கடமையாகுமெனவும் பிர கடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


மாதம் இருமுறை அச்சுப் பத்திரிகையாக வெளியாகும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை

20 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

வாரம் தோறும் eelanadu.ca என்ற மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்
தொடர்புகளுக்கு 416 841 9600

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# ஆதரவை விலக்கியது NDP! ஜஸ்ரின் ட்ரூடோ அரசிற்கு நெருக்கடி!



கனடாவில பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான சிறு பான்மை லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வந்த புதிய ஜன நாயகக் கட்சி தனது ஆதரவை விலக்குவதாக அறிவித்துள்ள நிலையில் எந்த நேரமும் அரசாங்கம் கவிழலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஜக்மீத் சிங் என்பவர் தலைமையில் இயங்கும் புதிய ஜனநாயகக் கட்சியே அரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப் பெற்று ள்ளது. ஆனால், ஆட்சிக்கு ஆபத்து அல்லது தேர்தல் உரு வாகும் சூழல் எதுவும் தற்போது ஏற்பட வாய்ப்பில்லை என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், பட்ஜெட்டை நிறை வேற்றவும் நம்பிக்கை வாக்கெடு ப்பில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் புதிதாக ஒரு கட்சியின் ஆதரவை ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பெற வேண்டிய நெரு க்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த 2022 முதல் லிபரல் அரசாங் கத்திற்கு அளித்து வந்த ஆத ரவை விலக்கிக் கொள்வதாக ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். தற்போதைய சூழ லில் ஜஸ்டின் ட்ரூ டோவால் எதிர் கட்சியான கன்சர் வேடிவ்களை எதிர் கொள்ள முடியவில்லை என ஜக்மீத் சிங் குற்றஞ் சாட்டியுள்ளார்.

2022ல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த த்தின் அடிப்படையில் 2025 வரை யில் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்க த்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவளிக் கும். பதிலுக்கு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு முன்னு ரிமை அளிக்க வேண்டும். 2015 நவம்பர் முதல் ஆட்சியில் இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ, தற்போது மிக மோசமான பின்னடைவை சந்திப்பார் என்றே ஆய்வுகளில் தெரிய வருகிறது. புதிய ஜனநாயகக் கட்சியின் அழுத்தம் காரண மாகவே தேசிய அளவிலான பல் சுகாதார திட்டம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

2025 அக்டோபர் இறுதியில் முன்னெடுக்கப்படவிருக்கும் தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி மிக எளிதாக வென்று விடும் சூழலே தற்போது உள்ளது என்றும் ஜக்மீத் சிங் குறிப்பிட்டுள்ளார். மேலும், லிபரல் கட்சி மிகவும் பலவீனமாக உள்ளது என்றும், மிகவும் சுயநலவாதிகள் மற்றும் மக்களுக்காக போராடுவதற்கு பதிலாக பெருநிறுவன நலன்களுக்கு மிகவும் அர்ப்பணிப் புடன் உள்ளனர் என்றும் ஜக்மீத் சிங் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அது மட்டுமின்றி, லிபரல் கட்சியால் இனி மாற்றமாக இருக்க முடியாது என்றும் அவர்களால் இனி நம்பிக் கையை மீட்டெடுக்க முடியாது என்றும் ஜக்மீத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

2022ல் ஏற்படு த்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2025 வரையில் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவளிக் கும்.

இது இவ்வாறிருக்க கனடாவின் மத்திய வங்கி வட்டி வீதங்களை குறைத்துள்ளது. இன்றைய தினம் இது தொடர்பான அறிவிப்பு வெளி யிடப்பட்டுள்ளது.


இதன்படி வங்கி வட்டி வீதம் 4.25 வீதமாக பேணப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. அண்மைய நாட்களாக தனது மத்திய வங்கி வட்டி விகித ங்களை தொடர்ச்சியாக குறைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பொருட்களின் விலை கள் குறைவடைந்து வரும் நிலையில் இந்த வட்டி வீத குறைப்பு அறிவிக் கப்படுவதாக கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் ரிப் மெக்கலம் தெரிவித்து ள்ளார்.

எதிர் பார்க்கப்பட்டதை விடவும் நாட்டின் பொருளாதாரம் வேகமான வளர்ச்சியை பதிவு செய்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

குறிப்பாக இரண்டாம் காலாண்டு பகுதியில் இவ்வாறு வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது என தெரிவிக்கப்படு கிறது. நாட்டில் பணவீக்கம் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்தால் வட்டி வீதங்களை மேலும் குறைக்க முடியும் என மதிய வங்கி தெரிவித் துள்ளது.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு ஜோன் கனகசிங்கம்

யாழ்.உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸிசாகா, ஒட்டவா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஜோன். கனகசிங்கம் அவர்களது 31வது நினைவு நாள் 01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஜோன். கனகசிங்கம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த் திக்கின்றார்கள்.




கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக் களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இரட்டை வேடம் போடும் சிவஞானமும் குத்துக்கரணம் அடிக்கும் மாவையும்

இலங்கை தமிழரசு கட்சி ஆதரவு தெரிவித்தாலும் நான் மேடைகளில் பங்குபற்ற மாட்டேன், எனது முடிவை மக்கள் தீர்மானிக்க வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சியின் தூணைத்தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீவிகே சிவஞானம் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதென இலங்கை தமிழ் அரசு கட்சி தீர்மானித்தமை மற்றும் இது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் வெளிவருவது தொடர்பில் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்தியகுழு கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதெனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர் அந்த தீர்மானத்தை ஆதரித்தனர்.

பொதுவேட்பாளர் ஆதரவு நிலைப்பாட்டைக் கிளிநொச்சி கிளை சார்பில் த.குருகுலராஜா சமர்ப்பித்திருந்தார்.

இதேவேளை நான் ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதைக் கட்சி தீர்மானிக்காமல் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பதை அறிவிப்போம் என்ற கருத்தை முன் வைத்துக் கலந்துரையாடினேன். எனினும் சஜீத்தை ஆதரிப்பதாகக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் ஆதரித்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.





இந்த கூட்டத்தில் மாவை சேனாதிராஜா உடல் நலக் குறைவால் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எது எவ்வாறாக இருந்தாலும் நான் ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாசவினது பிரச்சார கூட்டத்திற்குச் செல்லப் போவதும் இல்லை எத்தகைய பிரச்சாரத்தையும் மேற் கொள்ள மாட்டேன் என்றார்.

இது இவ்வாறிருக்க இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வவுனியாவில் நேற்று நிறைவேற்றிய தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் 01 செப் 2024 திங்கட்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், சுகவீனம் காரணமாக ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடை பெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளமுடியவில்லை.

ஆனாலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை ஒற்றுமையாக இணைந்து நடைமுறைப்படுத்துவோம் என்றார்.

# ஜெனிவாவில் இருந்து வரும் அச்சுறுத்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றீர்கள்? வேட்பாளர்களிடம் கேள்வி!



ஜெனீவாவின் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் மூலம் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதை ஜனாதிபதி வேட்பாளர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் ஜகத் டயஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதாரமற்ற யுத்த குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து யுத்தத்தில் வெற்றி பெற்ற இராணுவத்தினரை இலங்கை அரசாங்கம் தண்டிக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கும் மனித உரிமை பேரவையை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பது குறித்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவின் சமீபத்தைய அறிக்கையை சுட்டிக் காட்டியுள்ள ஜகத்டயஸ் இந்த கடும் சவாலை எதிர் கொள்வதில் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் உள்ள பொறுப்பை வலியுறுத்தியுள்ளார்.

யுத்தகுற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தான் குற்றம் சாட்டியவர்களை விசாரணைகளிற்கு உட்படுத்தி தண்டிப்பதற்கு இலங்கை தவறி விட்டதாக குற்றம் சாட்டும் ஜெனீவா வெளிப்புற உலகளாவிய நியாயாதிக்கத்தை பயன்படுத்துதல், நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்டவர்களிற்கு எதிராக பொருளாதார தடைகள் பயணத்தடைகளை விதித்தல், சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் பிற நடவடிக்கைகள் போன்ற தந்திரோபாயங்களை சர்வதேச சமூகம் பின்பற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது என ஜகத்டயஸ் தெரிவித்துள்ளார்..

இதேவேளை ஜெனிவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது அமர்வு செப்டம்பர் 9 இல் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அன்றைய தினமே இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. அமர்வின் நிகழ்ச்சி இலக்கம் 2 இன் கீழ் இலங்கை விவகாரம் பட்டியலிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9ஆம் திகதி பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பின்னர் அறிக்கை தொடர்பான ஊடாடும் உரையாடல் இடம்பெறும்.

57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் பேரவை ஆணை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மக்களை முட்டாளாக்குதல்

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் தீர்மானத்திலுள்ள குழப்பங்கள் தொடர்பில் எமது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம். தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு பின்னாலுள்ள மக்கள் விரோத அரசியல் தொடர்பிலேயே இந்தத் தலையங்கம் கவனம் கொள்கின்றது. இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்ததாக நம்பப்படும் மனித உரிமைகள் மீறல் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுமாறு நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் என்பதன் அடிப்படையாக இருப்பது இதுதான். தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் பொறுப்புக் கூறுமாறு கேட்கும்போது, சொந்த மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய கடப்பாடு அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போருக்கு இல்லையா? மக்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் அரசியல் தீர்மானங்களின் வெற்றிக்கு பொறுப்பு ஏற்றுக்கொள்வதால் பெருமிதம்கொள்ளும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தங்களின் தோல்விகளுக்கு பொறுப்புச் சொல்ல முற்படுவதில்லை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நகர்வுகள் தமிழ் மக்களை எந்தளவு முட்டாளாக்க முடியுமோ அந்தளவுக்கு முட்டாளாக்க முயற்சிக்கின்றன. 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அது ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியிருந்தது. ஏனெனில், அந்த ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்களுக்கும் பிரதான பங்கிருந்தது. ஆனால், ஆட்சி மாற்றத்தை எவ்வாறு கையாள வேண்டும்? எவ்வாறு கையாண்டால் அது அரசியல் தீர்வில் ஒரு படியாவது முன்னோக்கிப் பயணிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் என்பது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இந்தப் பின்புலத்தில் அரசமைப்பில் இருக்கின்ற அதிகாரங்களை ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க முடியுமென்னும் பரிந்துரை முன்வைக்கப்பட்டது.

அன்றைய சூழலில் ஓர் ஆராக்கியமான பார்வையாகவே அது இருந்தது. ஆனால், சம்பந்தன் — சுமந்திரன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்து, அதன் மூலம் எழுபது வருடங்களுக்கு மேற்பட்ட தேசிய இனப்பிரச்னையை தீர்த்துவிட முடியுமென்று தமிழ் அரசுக் கட்சி வாதிட்டது. அதன் சாத்தியமின்மையை பலரும் சுட்டிக் காட்டியபோது அதனை தமிழ் அரசுக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறெல்லாம் வாதிட்ட பின்னணியை கொண்டிருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இப்போது என்ன செய்து கொண்டிருக்கின்றது? எவ்வாறான தீர்மானத்தை மேற் கொண்டிருக்கின்றது? சரியான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கின்றதா? சமஷ்டி அடிப்படையிலான அரசியல் யாப்புக்கான உறுதிமொழியை வழங்கும் தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவளிக்கவுள்ளதாகக் கூறிய தமிழ் அரசுக் கட்சி தற்போது எந்த வாக்குறுதியின் அடிப்படையில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது?

மக்களுக்கு கடந்த காலத்தில் வழங்கிய வாக்குறுதகளுக்கு என்ன நடந்தது? அவற்றுக்கு யார் பொறுப்புக் கூறுவது? மக்கள் முட்டாள்கள் என்பதால் மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியது இல்லையா இது தான் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடா? ஒரு புறம் தமிழ்த் தேசியத்தின் பெயரால் கஜேந்திரன்கள் தமிழ் மக்களை முட்டாளாக்க முடியுமென்று எண்ணிச் செயல்படும் போது மறுபுறம், தமிழ் அரசுக் கட்சியும் ஏட்டிக்குப் போட்டியாக நாங்களும் சளைத்தவர்கள் அல்லர் என்னும் அடிப்படையில் மக்களை முட்டாளாக்கும் அரசியலை முன்னெடுத்து வருகின்றதா? மக்களை எல்லாக் காலத்திலும் முட்டாளாக்க முடியுமா என்பதற்கு பதிலளிக்க வேண்டியவர்கள் மக்கள் மட்டும் தான்.


## கனடா வாழ் துன்னாலை - கரவை மக்கள் மன்றம் 22வது ஆண்டு "ஞானதீபம்" 2024 கலைவிழா

கனடா வாழ் துன்னாலை — கரவை மக்கள் மன்றம் நடாத்தும் 22வது ஆண்டு ஞானதீபம் 2024 பல்சுவை கலை விழா எதிர்வரும் September 07, 2024 சனிக்கிழமை, மாலை 5.00 மனிக்கு Thamilisai Kala Mandram- 1120 Tapscott Road Unit #3 Scarborough Ontario M1X 1S9 இல் அமைந்துள்ள் மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477

# சஜித்தை தமிழரசுக்கட்சி ஆதரிக்க முடிவு செய்ததால் மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது ரணில் தடுத்து விட்டார் - சுமந்திரன்

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற முடியாது இறுதித் தருணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தடுத்துள்ளதன் மூலம் அவர் ஒரு இனவாதி என்பதை நிரூபித்துள்ளதுடன், தமிழர்களை பழி வாங்கியும் விட்டார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 03 செப்டம்பர் 2024 விசேட கூற்றொன்றை முன் வைத்து உரையாற்றிய எம்.ஏ.சுமந்திரன், என்னால் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

குறித்த திருத்தச் சட்டமூலம் 03 செப் 2024 செவ்வாய்க்கிழமை மூன்றாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். நான் ஜனாதிபதிக்கு அழைத்த போது, மூன்றாம் வாசிப்புக்காக இந்த திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் சபாநாயகருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்துவதாகவும் கூறினார்.




ஆனால், இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேறு வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க தீர்மானம் எடுத்தமையால் இதனை இன்றைய நிகழ்சி நிரலில் உள்வாங்காது தடுத்துள்ளனர்.

ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்காமையால் தமிழர்களை பழிவாங்கியுள்ள ரணில். ரணில் விக்ரமசிங்க தமது காலத்தை முடிக்கும் தருணத்தில் ரணில் ராஜபக்ச என்று நிரூபித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க இனவாதியாக தமிழ் மக்கள் முன்பும் இந்த நாட்டு மக்கள் முன்பும் காட்டப்படுவார். தமிழ் மக்களுக்கு எதிராக அவர் செய்யும் இந்த விடயம் இனவாதியாக காட்டிக் கொள்ளவே. தமிழ் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அவர் கொடுத்துள்ளார். ஆனால் எதனையும் அவர் செய்யவில்லை.

கடைசி நேரத்தில் எம் மக்கள் மீது வெறுப்பை காட்டும் செயல்பாடாகவே இதனை பார்க்கிறோம் என்றார்.

## செல்வம், சித்தர் தலைமறைவு?





ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞான வெளியீட்டில் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளாமல் தலைமறைவு ஆகி விட்டனர்.

இவ்விரு தலைவர்கள் ஏற்கனவே தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்கள் என்பதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 34வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாள் 06 செப்டம்பர் 2024 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# சஜித் ஆதரவுக்கு மாவை அதிருப்தி! மகன் கலையரசன் சஜித்துக்கு ஆதரவு!

ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாச வுக்கு ஆதரவு வழங்க தீர்மானித் துள்ளமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்து ள்ளார். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

இலங்கை தமிழரசுக் கட்சியானது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் தீர்மானி க்கப்பட்டுள்ளதாக அக் கட்சியின் ஊடக பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரி விக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதி பதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா வுக்கு இலங்கை தமிழரசுக் கட்சி யானது ஆதரவளிக்க தீர்மானித்து ள்ளமை தொடர்பில் தனக்கு எது வும் தெரியாது.

குறித்த தீர்மானம் தொடர்பில்



இதுவரை தனக்கு உத்தியோக பூர்வமான அறிவிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் இதனை தமிழரசுக்கட்சியின் உத்தி யோகபூர்வமான அறிவிப்பு என்று ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் திட்டவட்டமாக அறிவித்தார்.

அதேவேளை இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு எனவும் மாவை. சேனாதிராஜா தெரிவித் தார். மத்திய குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீ தரன், சார்லஸ் நிர்மலநாதன், முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கள் யோகேஸ்வரன் மற்றும் ஸ்ரீ நேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக் கப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் இவ்வளவு சீரழிவுக்கும் அழிவுக்கும் மாவை சேனாதிராஜாவின் தலைமையே காரணமாகும். பதவி வெறியில் யார் யாரிடம் எல்லாம் கட்சியை அடகு வைத்து அவமானப்படுத் திய ஒரு முதுகெலும்பு அற்ற தலைவராகவே அவர் காணப்படு கின்றார்.

அவரது கருத்துக்களையோ தலைமையையோ அவரது மகன் கலையமுதனே ஏற்றுக்கொள்வ தில்லை. மாவை சேனாதிராஜா வின் மகன் மற்றும் சாவகச்சேரி முக்கியஸ்தர் ஒருவர் என பலர் ஐக்கிய மக்கள் சக்தியில் இணை ந்துள்ளனர்.

மாவை சேனாதிராஜாவின் புதல்வ ரான கலை அமுதனும் சஜித் பிரேமதாசவுடன் இணைந்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சஜித் பிரேதமாச வடமாகாணத் திற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுராவின் ஆதரவு பெருகுகின்றதா?

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜே. வி. பி. தொடர்பில் ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. அதாவது, சிறீலங்கா சுதந்திரக் கட்சி பிடிக்கா விட்டால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள் ஆனால், ஒருபோதும் ஜே. வி. பிக்கு வாக்களித்து விடாதீர்கள். கொழும் பின் ஆளும் தரப்பு தங்களுக்குள் முரண்பட்டாலும் கூட தங்களை வீழ்த்தும் மூன்றாவது சக்தி யொன்று உருவாகி விடக்கூடாது என்பதில் எப் போதும் கவனமாக இருந்து வந்திருக்கின்றது. அண்மையில் கூட, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர் ஒருவர் அவ்வாறு கூறியிருக்கின்றார். தாங்கள் இல்லாவிட்டால் ரணில் வெல்லட்டும் என்று அவர் கூறியிருக்கின்றார்.

கொழும்பின் அதிகாரபீடமானது மாறி மாறி ஒரு குறிப்பிட்ட அதிகார வர்க்கத்திடம்த ான் இருந்து வந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணி யில் தான் தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்கவின் செல் வாக்கு அதிகரித்து வருவதான செய்திகள் வெளி யாகி வருகின்றன. இதனை எவ்வாறு புரிந்து கொள்வது? உண்மையிலேயே அவர்களின் செல் வாக்கு அதிகரித்து வருகின்றதா அல்லது அவ் வாறானதொரு தோற்றத்தை ஏற்படுத்தி ஏனையவர் கள் ஒன்றிணைக்கப்படுகின்றனரா? ஏனெனில், அநுரகுமார திஸநாயக்க வெற்றி பெறுவதை ரணி லும் விரும்பப் போவதில்லை சஜித் பிரேமதாஸவும் விரும்பப் போவதில்லை. ஏனெனில், மூன்றாவது சக்தியொன்று அதிகாரத்தைக் கைப்பற்றுவதை எப்பாடுபட்டேனும் தடுக்க வேண்டும் என்னும் அரசியல் வகுப்பில் தான் இருவரும் கற்றிருக்கி ன்றனர்.

கொழும்பின் அதிகாரம் எப்போதும் தங்களின் வசம் தான் இருக்க வேண்டும் என்று ஒரு சிங்கள அதிகார வர்க்கம் செயல்பட்டு வருகின்றது. ராஜபக்ஷக்கள் எழுச்சியடைந்த போது கொழும்பின் உயரடுக்கினரின் செல்வாக்கு வீழ்ச்சி யுற்றது. ஆனால், ஜே. வி. பி. எழுச்சியுற்றால் அதி காரத்தை கைப்பற்றினாலும் அது மிகவும் சிக்கலானதாக அமையுமென்றே அவர்கள் கணிப் பர். ஏனெனில், அநுரகுமார திஸநாயக்கக்கள் ராஜ பக்ஷக்கள் போன்றவர்கள் அல்லர். ராஜபக்ஷக் களிடம் சித்தாந்த பலம் இல்லை. அதனால், அவர் களிடம் அதிகாரம் தொடர்பான உறுதியான நிலை ப்பாடு இல்லை.

ராஜபக்ஷக்களை பொறுத்தவரையில் அரசியல் அதிகாரம் என்பது வெறும் பணம் சம்பாதிக்கும் கருவி ஒன்று தான். அத்துடன், குடும்பம் செல் வாக்கை விரிவுபடுத்துவது. ஆனால், அநுர குமார திஸநாயக்கக்கள் இலக்கு வைக்கும் அதிகார அரசியல் முற்றிலும் வேறானது. அது மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் அதிகாரத்தை எவ் வாறு கையாள வேண்டும் என்னும் நிலைப்பாடு கொண்டது. இவ்வாறான பின்னணி கொண்ட ஜே. வி. பி. அதிகாரத்தைக் கைப்பற்றுவதை சிங்கள ஆளும் வர்க்கம் நிச்சயம் விரும்பப் போவதில்லை. ஆனால், மக்களிடம் ஒரு விழிப்பும் எழுச்சியும் ஏற்பட்டுவிட்டால் அதன் பின்னர் எழும் அலையை எவராலும் கட்டுப்படுத்த முடியாது.

# தமிழரசுக்கட்சி மத்திய குழுத் தீர்மானம் என்பது கூட்டுத் தீர்மானமென செயலர் சத்தியலிங்கம் விளக்கம்



தமிழரசுக் கட்சி மத்திய குழுத் தீர்மானம் என்பது கூட்டு தீர்ம ானமே என கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரி வித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக கட்சி யின் ஊடகப் பேச்சாளர் கூட்ட த்தின் பின் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்து இருந்தார். அதனை தமிழரசுக் கட்சி தலை வர் மாவை சேனாதிராஜா மறுப்பு தெரிவித்து அது கட்சியின் தீர்மானம் இல்லை என தெரிவித் துள்ளார். இது தொடர்பில் கட்சி யின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா அவர்கள் கலந்து கொள்ள வில்லை. மத்திய குழுத் தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம். மத்திய குழுவில் 30 பேர் கலந்து கொண்டார்கள். மாவை சேனாதி ராஜா அவர்களுக்கும் அறிவித்து அவரும் வருவதாக இருந்தார். உடல் நிலை சரியில்லை என்று காலையில் தெரிவித்து அவர் கலந்து கொள்ளவில்லை. மூத்த துணைத் தலைவர் தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. மத்திய குழுவின் தீர்மானம் தான் சஜித் பிரேமதாச அவர்களுக்கு அதரவு வழங்குவது என்பது. அதனையே அறிவித்தோம். எதிர் வரும் 4 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு. அதனால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அவருடன் ஏற்க னவே நான் கதைத்துள்ளேன். இது தொடர்பாக நான் கதைக் கிறேன்.

மூத்த துணைத் தலைவர் யாழ்ப் பாணத்தில் நேரில் சந்தித்து மாவை சேனாதிராஜா அவர்களு டன் கதைப்பார் எனவும் தெரிவித் தார்.

# 13வது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு மாகாணசபை வலுப்படுத்தப்படும்

அரசியல் யாப்பில் உள்ளவாறாக 13 வது திருத்தச் சட்டம் அமுல்படுத்த ப்பட்டு மாகாண சபைகள் வலுப்படு த்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா தெரிவித்தார்.

யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் 01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை காலை ஊடக நிறுவனங்களின் பிரதி நிதிகளை சந்தித்து தனது அரசியல்– பொருளாதார நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

13வது திருத்தச் சட்டத்தை முழு மையாக அமுல்படுத்துவேன் என்று உறுதியாகத் தெரிவிக்கும் ஒரேயொரு வேட்பாளர் நான் மட்டுமே. ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றி நிச்சயமா னது. மேலும் அடுத்த பாராளு மன்ற தேர்தலிலும் அறுதிப் பெரும் பான்மை யுடன் வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைப்பது உறுதி.

அதேவேளை, 13 வது திருத்தத்தை



அமுலாக்க வேண்டியது நாட்டின் எதிர்கால சமாதானத்துக்கும் அபிவிரு த்திக்கும் அவசியமானதாகும்.

அது தேர்தலுக்கான வெறும் அரசியல் கோசம் அல்லவென்றும் அது தான் தாய் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றி னால் எடுக்கப்படும் முடிவாகும் என் றும் அவர் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலை நல்லூர் ஆலயத் திற்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்காகவும், ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெற்றிகரமாக முன் னெடுப்பதற்குமாக வேண்டியும் ஆசி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. மேலும், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பெர்னாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட அவர், யாழ் நாகதீப ராஜ மகா விகாரைக்கு சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப் பிடத்தக்கது.


## சுன்னாகத்தில் காணி விற்பனைக்கு!

சுன்னாகத்தில் மின்சார நிலைய வீதியில் அரசாங்கத் தின் பரிசோதனை நடைபெற்று எந்தவொரு நிலத்தடி நீரும் அசுத்தமாக வில்லை என்ற சான்றிதழ் பெற்ற 8 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்த காணி. விலை பேசித் தீர்க்க லாம்.

தொடர்புகளுக்கு:- 416 841 9600

# தவறாக வழி நடத்துகின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர்! சர்வதேச நெருக்கடிக் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன்கீனன்

2000 ஆண்டு முதல் 2009 வரையில் தங்கள் உறவுகள் காணாமல் போனதாக 6047 பேர் மாத்திரமே முறைப்பாடு செய்துள்ளனர். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருப்பது தவறாக வழி நடத்தும் ஒரு நடவடிக்கையாகும்என சர்வதேச நெருக்கடி குழுவின் இலங்கை குறித்த ஆய்வாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய வெளிப்படை தன்மையற்ற அதிகாரத்துவ பொறிமுறைகளின் புள்ளி விபரங்களை அடிப்படையாக கொண்டிருக்கலாம்.

2000 ஆண்டு முதல் 2009ம் ஆண்டு என்பது 1970களின் பிற்பகுதியில் ஆரம்பித்த அரசாங்கத்திற்கும் தமிழ் போராளிகளிற்கும் இடையிலான கிளர்ச்சி கிளர்ச்சி எதிர்ப்பு யுத்தத்தின் ஈவிரக்கமற்ற ஒரு சிறிய காலம் மாத்திரமே. இந்த காலப்பகுதியில் பல ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போனார்கள்.

தங்கள் குடும்பத்தவர்களை காணவில்லை என முறையிட்ட 6047 பேரில் இசிலர் அல்லது பலர் குடும்பத்தில் பலரை இழந்திருக்கலாம் எனவே காணாமல் போனவர்களின் எண்ணிக்கை காணாமல்போனவர்கள் குறித்த முறைப்பாடுகளை விட கணிசமான அளவு அதிகமாகயிருக்கலாம்.

பல தசாப்தங்களாக ஆணையங்கள் குழுக்கள் மற்றும் பல்வேறு பிற தகவல் சேகரிப்பு செயல்முறைகளுக்குப் பிறகு காணாமல் போனவர்



களின் பல குடும்பங்கள் சோர்வடைந்துள்ளன சலிப்படைந்துள்ளன கோபமடைந்துள்ளன தாங்களாகவே இறந்து விட்டன அல்லது போலீஸ் மற்றும் இராணுவத்தால் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன – இதனால் புகார் தெரிவிப்பவர்களின் எண்ணிக்கை குறைகிறது.

இடதுசாரி சிங்கள ஜேவிபியின் இரண்டு கிளர்ச்சிகளின் போதும் ஆயிரக்கணக்கானவர்கள் அரசபடையினர் துணை இராணுவகுழுக்களால் காணாமலாக்கப்பட்டனர் என்பது நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

இவை குறித்து மிகச்சிறிய எண்ணிக்கையிலான வழக்கு விசாரணைகள் மாத்திரம் இடம்பெற்றுள்ளன சில உண்மைகள் மாத்திரம் வெளிவந்துள்ளன.

நான்கு தசாப்தகால வன்முறைகளின் போது அனைத்து இனங்கள் மதங்களையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் காணாமலாக்கப்பட்டு



ள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஒரு சிலரின் தலைவிதி குறித்து கூட உத்தியோகபூர்வமான தீர்மானங்கள் எதுவும் வெளியாகவில்லை அரசாங்கம் பொறுப்பேற்கவுமில்லை நீதி வழங்கப்படவுமில்லை. பல தசாப்தங்களாக உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த வேண்டுகோள்களிற்கு இலங்கை அரசாங்கங்கள் அளித்து வரும் மறுப்பு மற்றும் பொறுப்பை திசை திருப்பும் பதிலையே இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் பேட்டியில் வழங்கியுள்ளார். காணாமல் போனவர்களின் குடும்பத்தவர்களும் இலங்கையர்களும் இதனை விட சிறந்த பதில்களிற்கு உரித்துடையவர்கள் எனவும் தெரவித்துள்ளார்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 06செப்டம்பர் 2024 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்ல க்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஜே.வி.பி செட்டை கழற்றிய நாகம் தான் என்.பி.பி.

அழகு குணசீலன்

இது அரகலயவுக்கு அரகலய காலம். காலிமுகத்திடல் அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் தவறான அரசியலை செய்து 'புரட்சி' செய்கிறோம் என்று 'எதிர்ப்புரட்சி' செய்து மக்களின் எழுச்சியை மழுங்கடித்த ஜே.வி.பி.க்கு இப்போது மங்குசனி. ஜே.வி.பி. காலிமுகத்திடலில் தங்களின் கடந்த கால 1971, 1987, 2022 வன்முறைகளின் வரிசையில் மீண்டும் ஒரு முறை வன்முறையை கட்டவிழ்த்து விட்டு தனது தீவிர வலதுசாரி போக்கை நிறுவியது.

சிறுபான்மை தேசிய இனங்களை கவருவதற்காக இடதுசாரி அரசியல் அடிப்படை அற்ற நூல்நிலையம், போரில் ஈடுபட்டு அங்கங்களை இழந்த இராணுவத்தினரை காட்சிப்படுத்தல், புலிப்படைக்கு அஞ்சலி ....... போன்ற பல அரசியல் பூச்சுத்துக்கள் காலிமுகத்திடலில் ஜே.வி.பி.யினால் மேற்கொள்ளப்பட்டன. மேற்குலகமும், ஜே.வி.பி.யும் இதன் மூலம் பரஸ்பர நன்மையை பெற்றுக்கொண்டன. இரு தரப்பும் வங்குரோத்து நாடு ஒன்றில் தேசிய சொத்துக்களும், தனியார் சொத்துக்களும் அழிக்கப்பட்டது குறித்து எந்த கவலையும் கொள்ளவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக ஜே.வி.பி மக்களை எவ்வாறு தவறாக வழிநடத்தியது என்பது இப்போது வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. இதனால் அதற்கான ஆதரவு தென்னிலங்கையில் பாரிய வீழ்ச்சியை அடைந்து, முதல் நிலையில் இருந்த அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படும் நிலையில் உள்ளார். இந்த ஆதரவு வீழ்ச்சியை சரிசெய்ய என்ன விலையையும் கொடுக்க அவர்கள் தயாராகி வருகின்றனர். இதனையே அநுரகுமார கோயில் குளங்களை தரிசித்து வருகிறார் என்று வெளிச்சம் கடந்த பதிவில் குறிப்பிட்டிருந்தது.

கடந்த வாரம் இன்னும் ஒரு படி மேலே போய் கையில் காப்பு நூல் கட்டியும், ஆயிரக்கணக்கான பிக்குகளை கூட்டியும் தன்னையும்,



ஜே.வி.பி.யையும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் ஒரு அடையாளமாக, காப்பாளனாக காட்சிப்படுத்தி இருக்கிறார். இந்தியா சென்ற போது பூநூலும் அணிந்தாரோ தெரியவில்லை. 'செட்டையை' முழுமையாக கழட்டினால் தெரியும். இதனால் இதுவரை ஜே.வி.பி.யை 'சிவப்பு' என்று நம்பிய மக்கள் மத்தியில் அதன் நிறம் 'வெளிறி' வருகிறது.

ஆகஸ்ட் 26ம் திகதி ஜே.வி.பி. ஃஎன்.பி.பி.யின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் இந்த நாட்டில் புரையோடிப்போய் இருக்கின்ற சிறுபான்மைத் தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு எந்த திட்டவட்டமான தீர்வும் இல்லை. சிறுபான்மை மக்கள் இடதுசாரி கொள்கை நிலைப்பாட்டில் ஜே.வி.பி.யிடம் இருந்து இவ்வாறான தேர்தல் அறிக்கையை எதிர்பார்க்கவில்லை. திசை காட்டி மக்களுக்கு சரியான திசைக்கு பதிலாக தவறான திசையைக் காட்டி வழிநடத்த முனைகிறது.

இன்னொரு வகையில் சொல்வதென்றால் சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு 'இரண்டாவது கோத்தபாயவாக' பிரகடனம் செய்துள்ளார் அநுரகுமார. கோத்தபாயவின் 'ஒரு நாடு ஒரு சட்டம் என்றதன் மறுவார்த்தை 'நாம் இலங்கையர்கள்' இது தான் காலிமுகத்



திடலில் விண்ணைத்தொட்ட கோஷம். கோஷங்களே ஜே.வி.பி.க்கும் கொள்கையாகிப் போனது. இந்த நிலைப்பாட்டில் எத்தனையோ தீவிர வலதுசாரி கட்சிகள் இருக்கும் போது ஜே.வி.பி.யின் தவறான நிறத்தில் இன்னொரு கட்சி தேவையா?

'நாம் இலங்கையர்' என்பது உளவியல் உணர்வு. அதை இந்த நாட்டின் ஒவ்வொரு முஸ்லீம், தமிழ், சிங்கள பிரஜைகள் உள்ளார உணரவேண்டும். அதற்கான அடிப்படையை 'நாம் இலங்கையர்' என்ற இலக்கு நோக்கி பயணிப்பதற்கான வீதி வரைபடம் ஜே.வி.பி – என்.பி.பி.யின் தேர்தல் அறிக்கையில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த எதிர்பார்ப்பை நம்பிக்கையை அவர்கள் சிதைத்திருக்கிறார்கள்.

இலங்கையின் ஒட்டு மொத்த இடதுசாரி அரசியல் வரலாறானது பெரும்பாலும் சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகளை மறுத்த, வலதுசாரிகளுடன் கை கோர்த்த வரலாறாகவே உள்ளது. 'நாம் இலங்கையர்கள் என்ற கோஷம் கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக எழுப்பப்படுகின்ற ஒன்று. சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரி ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 1972 அரசியல் அமைப்பு மரபு ரீதியான இடதுசாரிகளின் இந்த கோஷத்தை தோலுரித்துக் காட்டியது. இது இலங்கையின் இடதுசாரிகளுள் ஒருவரான, அரசியல் அமைப்பு சிற்பி என வர்ணிக்கப்பட்ட கொல்வின் ஆர்.டி. சில்வாவினால் தயாரிக்கப்பட்டது என்பது வெட்கப்பட வேண்டிய ஒன்று. இத்தனைக்கும் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட போது ஒரு மொழி இரு நாடு, இரு மொழி ஒரு நாடு என்று கூறிய அவரால் இந்த குடியரசு அரசியலமைப்பு எழுதப்பட்டதென்றால் அதற்கு கதிரையைத் தவிர வேறென்ன காரணம் இருக்க முடியும். இந்த சிங்கள மேலாண்மை மனோநிலையே 'நாம் இலங்கையர்' என்ற நிலைப்பாட்டில் இருந்து என்.சண்முகதாசன், வி.பொன்னம்பலம் போன்றவர்கள் காலப் போக்கில் தென்னிலங்கை மரபுவழி இடதுசாரி அரசியலில் இருந்து விலகி நிற்க காரணமானது. கொல்வின் ஆர்.டி.சில்வாவுடன் லங்கா சமாஜ மாஜக்கட்சியில் பயணித்த வாசுதேவ நாணயக்கார, விக்கிரபாகு கருணாரெட்ண போன்றோர் வெளியேறி நவ சமாஜ மாஜக் கட்சியை அமைத்த போதும் பின் வந்த காலங்களில் அவர்களும் பேரினவாத அலையில் அடிபட்டுப் போயினர். வாசுதேவ நாணயக்கார அமைச்சர் பதவிக்காக ஒத்தோடினார்.

சந்திரிகா குமாரதுங்க இடது சார்ந்த ஒரு சமூக ஜனநாயகவாதி என்றும், இனவாதம் மற்றும் மதவெறியை எதிர்ப்பதில் தேசிய ஒற்றுமைக்காக நிற்பவர் என்றும் வாசுதேவ அப்போது கூறினார். அண்மையில் மரணித்த விக்கிரமபாகு கருணாரெட்ண தனது இறுதிக் காலத்தில் வலதுசாரி ஐக்கிய தேசிய கட்சியில் ரணில் தலைமையில் இணைந்து எம்.பி. பதவி பெற தயாராய் இருந்தார். வாசுதேவ கூறிய வார்த்தைகளை முன்னும், பின்னும் மாற்றிப் போட்டு விக்கிரமபாகு இப்படி கூறினார். இனவாதம் மற்றும் மதவெறியை எதிர்க்கும் ஒரு சமூக ஜனநாயகவாதியாக யு.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறேன் என்றார்.

இன்னும் ஒரு படி மேலே சென்ற விக்கிரமபாகு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள எவரும் வெட்கப்படல் தேவையில்லை என்றதுடன் மட்டும் நிற்கவில்லை. மார்க்ஸ் உயிருடன் இருந்திருந்தால் ரணிலுடன் கைக்குலுக்கி அரவணைத்திருப்பார் என்றும் வெட்கம் இல்லாமல் கூறினார். 2010 இல் பச்சை சட்டை அணிந்து, யானை சின்னத்தில் களுத்துறை மாவட்டத்தில் யு.என்.பி.யில் போட்டியிட்டார். இன்று உயிருடன் இருந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவின் மேடைகளில் அவரைப் பார்க்க கிடைத்திருக்கும்.

காலப் போக்கில் இடதுசாரி அரசியல் என்பது எந்த வழியிலாவது பதவியைப் பெறுவதாகவே கடந்த 50 ஆண்டுகளில் இருந்துள்ளது. இதையே ஜே.வி.பி.யும் சிங்கள, பௌத்த மக்களை மையப்படுத்தி தற்போது செய்கிறது. இதனால்தான் ஒட்டு மொத்த இலங்கை மக்களும் இடதுசாரி அரசியலை சற்று எட்டத்தில் வைத்து பார்க்கிறார்கள். ஜே.வி.பி.யின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் கதிரையுள்ள திசையையே காட்டுகிறது. அதற்காக அனைத்து புரளியையும், புரட்டையும் செய்ய அது தயாராகிறது.

இடது வலது கொள்கை முரண்பாடுகளுக்கு அப்பால் சிங்கள தலைமைகள் ஆட்சி அதிகாரத்திற்காகவும், பதவிக்காகவும் ஒரே இனவாதப் பாதையில் பயணித்தனர். இதில் இருந்து தமிழர் அரசியல் வேறுபட்டதல்ல. தமிழ்த் தலைமைகளும் அதே பாதையில் பயணித்தனர். சிங்கள வலதுசாரிகளுடனே அவர்களின் இணக்க அரசியல் இருந்தது. முஸ்லீம் தலைமைகளிலும் இதுவே பொதுநிலை.

இவற்றோடு ஒப்பிடும் போது ஜே.வி.பி.யின் கடந்த கால அரசியல் வரலாற்றை மன்னித்த மனப்பாங்கில் தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் ஜே.வி.பி. மீது ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. அதனை ஜே.வி.பி.யின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம் மறுதலிக்கிறது. அதுவும் தனது அரசியலை சிங்கள, பௌத்த மக்களுக்காக செய்ய முனைந்துள்ளது. காலிமுகத்திடலில் ஒலித்த மாற்றம், மாற்று, முறைமாற்றம் எல்லாம் காலாவதியான கதையாகி விட்டது. மேலெழுந்தவாரியாக ஊழல், இலஞ்சம், நிர்வாக சீர்திருத்தம், தேர்தல் கால பொருளாதார சலுகைகள் பற்றியே பேசுகிறது ஜே.வி.பி.

1.வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் இடம் பெற்ற கொலைகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

2.பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சட்டங்கள் நீக்கப்படும் .

3.இந்தியாவை, பிராந்திய நாடுகளை அச்சுறுத்த இடமளியோம்.

4.சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவர்.

5. இனக்கட்டமைப்பை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட குடியேற்றங்கள் நிறுத்தப்படும்.(22ம் பக்கம் பார்க்க)

Chemistry & Math Tutoring

An Ontario-certified teacher with several years of experience teaching / tutoring Chemistry (Grades 11 & 12) and Math(Grades 9-12) would be available to help high school students in the same subjects for the academic year 2024/2025.

Contact 416 438-9157 (Home)
647 302-1763 (Cell)
email: mvignes11@gmail.com

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

24 ஆகஸ்ட் 2024 - 30 ஆகஸ்ட் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஆதித்தன் இரத்தினகிரி

காங்கேசன்துறைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஆதித்தன் இரத்தினகிரி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.திரு ஆதித்தன் இரத்தினகிரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்கைள வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 02 செப்டம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்த் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 20வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கதிரவேலு குகதாசன்

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த குகன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கதிரவேலு குகதாசன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாள் 24 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கதிரவேலு குகதாசன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 28 ஆகஸ்ட் 2024 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30,4வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




24 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த குகன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கதிரவேலு குகதாசன் அவர்களது 20வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




24 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை நோர்வேயில் வாழும் பகிரதி சிவகுமார் கனடாவில் வாழும் சுகந்தி கண்ணதர் ஆகியோரது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் அவர்களது பிறந்த நன்நாளுக்காக அவர்களது பெறமக்களும் பாசமுள்ள பெரியம்மாமாரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 50வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த ஈஸ்வரபாதம் இராஜதுரை அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த தலவாக்கல ஆசிரியர் பயிற்சிசாலை ஸ்தாபகர் அதிபர் அமரர் திரு அ.வ. பாலசுப்பிரமணியம் அவர்களது 95வது பிறந்த நாளாகும். அன்றைய தினம் அன்னாரது பிறந்த நாள் நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஆகஸ்ட் 2024 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி திவ்யா நந்தகுமார் அவர்களது 15வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி திவ்யா நந்தகுமார் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




20 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் பிரபல வீடு விற்பனை முகவர் திரு சிவா கந்தையா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 27 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




27 ஆகஸ்ட் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வாழும் திரு திருமதி செல்ராஜா கமலரஞ்சிதம் தம்பதிகளின் செல்வப்புதல்வி கீர்த்தனா செல்வராஜாவின் பிறந்த நன்நாளுக்காகவும் 27 செப்டம்பர் 2024 செல்வி கீர்த்திகா செல்வராஜாவின் பிறந்த நன்நாளுக்காகவும் சகோதரிகள் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




28 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழும் திரு மாசிலாமணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்களது 56வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

## 50வது ஆண்டு நினைவஞ்சலி

நிலையா வாழ்வை முடித்து
நீங்கா நினைவுகளைத் தந்து
நீடு துயில் கொண்டு
ஆண்டுகள் ஐம்பது ஆகினவோ?
ஆண்டவன் திருவடியில்
நிம்மதியாய் உறங்கும்
உங்களை தினம் தினம்
கை கூப்பி வணங்குகின்றோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த

அமரர் திரு
முருகேசு நடராஜா

யாழ்.மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முருகேசு நடராஜா அவர்களது 50வது ஆண்டு நினைவு நாள் 25 ஆகஸ்ட் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு முருகேசு நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



31 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஆதித்தன் இரத்தினகிரி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு முதலித்தம்பி பசுபதிப்பிள்ளை அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடா மிஸிசாகா, ஒட்டவா இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஜோன். கனகசிங்கம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 30வது ஆண்டு நினைவு நாளும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளும் ஆகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




02 செப்டம்பர் 2024:- புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 செப்டம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 13வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 செப்டம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜிதன் பிரசாந்தி இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



06 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை யாழ். தொல்புரத்தைச் சேர்ந்த திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 36வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



06 செப்டம்பர் 2024 வெள்ளிக்கிழமை வேலணை கிழக்கைச் சேர்ந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 34வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள், சகோதரங்கள் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



21 ஆகஸ்ட் 2024 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 19வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 56வது இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



கனடாவில் வசிக்கும் இன உணர்வாளரும் ஈழநாடு பத்திரிகையின் அபிமான வாசகருமான திரு மாசிலா மணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்களது 56வது பிறந்த நன்நாள் 29 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமையாகும்.

அன்றையதினம் தனது பிறந்த நன்நாளை மிக எளிமையாகக் கொண்டாடிய அவர் அன்றைய தினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஐம்பத்தியாறு (56) காணும் திரு மாசிலா மணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்கள் நோய் நொடியின்றி பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வேண்டு மென வாழ்த்தும் அவரது குடும்பத்தினர் உறவுகள் நண்பர்களுடன் இணைந்து ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் பாரதி இல்லக் குழந்தைகளும் வாழ்த் துகின்றார்கள்.

வாழ்க வளமுடனும்! நலமுடனும்!


கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு
yugam radio
yugam TV
CTAA
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு
நாடகப் பெருவிழா
2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை
நிகழ்ச்சித் தொகுப்பாளர்
ராம் பிரசாந்
SATURDAY
SEP
21
@4:30PM
Toronto Pavilion
190 Railside Rd,
North York, ON M3A 1A3
TICKETS: $20
Ravi 416-898 7284 / Ruby 416-670-6522
நாடக அனுசரணை வழங்குவோர்கள்
முற்பகல் செய்யில்
தவிப்பு
அடையாளம்
தில்லாலங்கடி
சிதம்பர சக்கரம்
K T GROUP
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
1730 VINCENT MASSEY DRIVE, CORNWALL, ON K6H 5R6
Tel : +1 416-939-4921
cornwallshivantemple@gmail.com
Web : www.cornwallshivan.ca
அக்‌ஷியா நகைமாளிகை
3351 Markham Rd, Red Building Scarborough, ON M1X 0A6
Vijaya Jewellery
TRUST INTEGRITY EXPERIENCE.
JEYA JEYAKANTHAN
100 பவுண் நகை பரிசு
647-702-2159
LISTO
Aravinth Ratnasingam
416 668 1234
CanMore
CALL OR EMAIL TODAY!
647 613 2900
647-996-5922
AUSPICIOUS
35 Karachi Dr
தமிழரின் நிர்வாகத்தில்
Royal King
416.706.0004
Selva Vettyvel
416.568.4301
Rishani Vettyvel
416.261.1544
Visit our website for a FREE Home Valuation
Shan Thayaparan
416-567-7675
TOP PRODUCER
FOR LAST 5 YEARS
2019 2020 2021 2022 2023
HOMELIFE
Abi Amalan
Amal Ganeshamoorthy
416.732.1810
416.829.9993
Royal Fashions
Tel : 416.358.5478
NEW PREMIUM STONE LTD
Quartz, Granite, Countertop
416.858.1290
100 Melford Dr, Unit #1, Scarborough, ON, M1B 2G4
TIMES IRON WORKS INC
கனகாம்பிகை
416-269-7198
RAGI KUMAR
EAST-WEST Accounting Consultants
289-660-7500
Vassant Deepa
EAST TOWN
YOUR INTEREST IS MY CAPTIAL
Sri Sivasubramaniam
CELL: 416-884-3991
Chapel Ridge
Christeen Seevaratnam
416-258-6759
Finch Warden Medical Clinic
Dr. M. Selvanantham
Dr. N. Thamotharam
THAMIZHA
(416) 878-5454
2900 Markham Rd Unit - D2, Scarborough
WORLD ACTION FOUNDATION
WAF HELPING HANDS OUTLET
3350 Eglinton Avenue E Unit 1-3, Scarborough
LOTUS
Funeral and Cremation Centre Inc.
A Funeral Home To Serve Our Community
416-834 5753
Patricia Peter
LAND KING
Specialized in Development Land Sales
JEGAN
416 666 9777
JRB universal inc
R.R.Rajkumar
647-289-6164
ALOE FRESH BEAUTY SPA
100 % Natural
Mrs. Vasanthi Ramasamy
647-787-1398
www.vashasproduct.ca
OPTIMART
FINANCIAL SOLUTIONS
AUTO • HOME • LIFE
Buying/renting a New Home / Condo? Substantially Renovating Your House?
GET YOUR HST REBATE
What if your Lawyer is also an Accountant?
Vina Devadas
DEVADAS LAW
416.266.1234
1415 Kennedy Road, Unit 3, Toronto, Ontario, M1P 2L6
Mohan Remisiar
416.528.0372
RE/MAX ACE
RUBY AND RUBY
INCOME TAX SERVICE
Thanam Kanagaratnam
Tax Analyst
416 (298-6718)
Stork Traders
WWW.STORKTRADERS.COM

# ஐந்தாவது

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன் டெல்ரன் ரஞ்ஜித் சங்கர்

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலியா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கரின் ஐந்தாவது பிறந்த நன்நாள் 09 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வன் டெல்ரன் ரஞ்சித் சங்கர் தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை ஐந்து காணும் செல்வன் டெல்ரன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடனும்! தமிழுடனும்!

# நான்காவது

## இனிய பிறந்த நன்நாள் வாழ்த்து



### செல்வன் Micaiah நகுல் சிவசோதி

கனடாவில் வசிக்கும் செல்வன் Micaiah நகுல் சிவசோதியின் நான்காவது பிறந்த நன்நாள் 17 யூலை 2024 புதன்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வன் Micaiah நகுல் சிவசோதி அன்றைய நாளுக்காக 21 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை நான்கு காணும் செல்வன் Micaiah பல்கலையும் கற்றுப் பார்போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடனும்! தமிழுடனும்!




# ஜனாதிபதி தேர்தல்:- தமிழ் மக்கள் அறிவுபூர்வமாக முடிவெடுப்பார்களா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் குறிப்பாக.கணித விஞ்ஞானப் பிரிவுகளைச் சேர்ந்த கல்வி நிலையங்களுக்கு என்னென்ன பெயர்கள் என்று பார்த்தால், விஞ்ஞான மண்டபம் விஞ்ஞான உலகம் விஞ்ஞான சமுத்திரம் விஞ்ஞான நீரோட்டம். விஞ்ஞான மூலை இணைந்த கணிதத்தில் வெற்றி, மிஸ்டர் பிஸிக்ஸ், இப்படியே நீண்டு கொண்டு போகும். இப்பெயர்கள் யாவும் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் தொடர்பான ஒரு சமூகத்தின் அபிப்பிராயங்களைக் காட்டுபவை. இந்நிறுவனங்களில் பல்லாயிரக் கணக்கான பிள்ளைகள் படிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் முன்னணி தனியார் பாடசாலைகள் சிலவற்றில் கணித அல்லது விஞ்ஞானப் பட்டதாரி ஒருவர்தான் அதிபராகவும் இருக்கலாம் என்று எழுதப்படாத விதி உண்டு. கணிதம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் குறித்து தமிழ் சமூகத்தில் உயர்வான மதிப்பீடுகள் உண்டு. இவ்வாறு கணித விஞ்ஞானத் துறைகளில் அதிகம் நாட்டமுள்ள ஒரு சமூகமானது தன் நடைமுறை வாழ்வில் எல்லாவற்றிலும் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளை கொண்டிருக்க வேண்டும். வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கணிதமாக அணுக வேண்டும். ஆனால் தனது பாடத் தெரிவுகளில் விஞ்ஞானத்துக்கும் கணிதத்துக்கும் முக்கிய இடத்தைக் கொடுக்கும் ஒரு சமூகம், தனது அரசியல் தெரிவுகளில் எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்து வருகின்றது?

உடுப்பு வாங்கப் போனால் புடவைக் கடையில் எத்தனை மணித்தியாலத்தை எமது பெண்கள் செலவழிக்கிறார்கள்? சந்தையில் நாளாந்தம் காய்கறி வாங்கும் பொழுதும் எவ்வளவு கவனமாகத் தெரிந்தெடுக்கிறோம்? தக்காளிப் பழத்தை நிறம் பார்த்து அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாக தெரிகிறோம் .கத்தரிக்காயை நிறம் பார்த்து அழுத்திப் பார்த்து ஒவ்வொன்றாகத் தெரிகிறோம். இவ்வாறு அன்றாட வாழ்வில் தெரிவு என்று வரும் பொழுது கவனமாகவும் நேரமெடுத்தும் பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், தனது அரசியலில் அவ்வாறு நிதானமாகவும் கணிதமாகவும் விஞ்ஞானர்வமாகவும் சிந்திக்கின்றதா?

அவ்வாறு விஞ்ஞானபூர்வமாக சிந்தித்திருந்தால் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும்? எப்பொழுது எடுத்திருந்திருக்க வேண்டும்?

தபால் மூல வாக்களிப்புக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய நாட்கள்தான் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சி எந்த ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தன் முடிவை அறிவிக்கவில்லை. இன்னொரு கட்சி பகிஸ்கரிக்கின்றது. ஏனைய கட்சிகள் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துகின்றன. இதில் எது விஞ்ஞானபூர்வமான முடிவு?

அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகளைக் கையாள்வது என்பது ஒரு கணித ஒழுக்கம். அப்படிப் பார்த்தால் தமிழ் மக்கள் தம் முன்னால் இருக்கும் எல்லா சாத்தியக் கூறுகளையும் ஆழமாகப் பரிசீலித்து முடிவுகளை எடுக்கின்றார்களா?

தமது கட்சிகளும் தலைவர்களும் எடுக்கும் முடிவுகளை குறித்து தமிழ் மக்கள் கேள்வி கேட்கின்றார்களா? நீங்கள் எந்த அடிப்படையில் முடிவுகளை எடுத்தீர்கள் என்று தமது தலைவர்களிடம் அவர்கள் கேள்வி கேட்பதுண்டா ?

சந்தையில் காய்கறிகளைத் தெரியும் பொழுது தெரிவு பிழைத்தால் உணவு வயிற்றில் நஞ்சாகிவிடும். பள்ளிக்கூடத்தில் பாடத் தெரிவு பிழைத்தால் கல்வி நரகமாகிவிடும். உடுப்புக் கடையில் தெரிவு பிழைத்தால் குறிப்பிட்ட நபரின் தோற்றக் கவர்ச்சி குறைந்து விடும். ஆனால் அரசியலில் தெரிவு பிழைத்தால் என்ன நடக்கும் ?



2009க்கு பின் வந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மூத்த தலைவராகிய சம்பந்தர் தீர்க்கதரிசனம் மிக்க ஒரு முடிவை எடுத்திருக்கலாம். அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருந்திருந்தால் தமிழ் அரசியலின் போக்கே வேறு திசையில் போயிருந்திருக்கும். சம்பந்தரின் பூதவுடல் தந்தை செல்வா கலையரங்கில் கூரை பதிந்த அந்த சிறிய மண்டபத்தில் விசிறிகளின் கீழே தனித்து விடப்பட்ட அவலம் ஏற்பட்டிருக்காது. ஓர் அரசனைப் போல அவருக்கு ராஜ மரியாதை கிடைத்திருந்திருக்கும். ஆனால் சம்பந்தர் ஒரு முதிய தலைவராகவும் அனுபவத்தில் பழுத்த தலைவராகவும் அன்று முடிவெடுக்கவில்லை. போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களிப்பது என்று முடிவெடுத்தார்..

அந்தத் தளபதி போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து போரை வழி நடத்திய ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகத் திரும்பியிருந்தார்.அது போர் வெற்றிக்கு உரிமை கோருவதில் வந்த போட்டி. அவ்வாறு ராஜபக்ஸக்களுக்கு எதிராகத் திரும்பிய தளபதியை வைத்து ராஜபசக்களை - அவர்கள் தமிழ் மக்களைக் கொன்று குவித்தனர் என்பதற்காக அல்ல,மாறாக - அவர்கள் சீனாவை நோக்கிச் சாய்கிறார்கள் என்பதற்காக, அரங்கில் இருந்து அகற்ற முயற்சித்த நாடுகளின் கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றி தமிழ்த் தரப்பு முடிவெடுத்தது. அதன் விளைவாக சரத் பொன்சேகாவோடு ஒரு உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டது. விளைவாக அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா மட்டும் தோற்கவில்லை, சம்பந்தரும் தோற்கத் தொடங்கினார். சம்பந்தரின் வழியும் தோற்கத் தொடங்கியது.

தமிழ் மக்களை அழிக்கும் போருக்கான அரசியல் தீர்மானத்தை எடுத்து, அதற்காக அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்களுக்கு எதிராக ஒன்று திரட்டிய ஒரு குடும்பத்துக்கு எதிராக வாக்களிக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு, தமிழ் மக்கள் அந்த குடும்பத்தின் ஆணையை ஏற்றுப் போரை முன்னெடுத்த ஒரு தளபதிக்கு வாக்களித்தார்கள். போருக்குத் தலைமை தாங்கிய ஒரு தளபதிக்கு வாக்களித்துவிட்டு, அந்தப் போரை ஒரு இன அழிப்பு போராகவும் அங்கே போர் குற்றங்கள் நடந்தன என்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்தன என்றும் அனைத்துலக சமூகத்தின் முன் போய் நின்று முறையிடுவது ஒரு புத்திசாலியான சமூகம் செய்யக்கூடிய அரசியலா?

சரத் பொன்சேகா இப்பொழுதும் தனது தேர்தல் பிரச்சாரங்களில் தான் மனித குண்டினால் தாக்கப்பட்ட பொழுது பயணித்த காரை ஒரு காட்சிப் பொருளாகக் காவித்திருக்கிறார். ஆனால் அவருடைய பிரச்சாரக் கூட்டங்களுக்கு சிங்கள மக்கள் வருவது குறைந்து விட்டது. அந்தக் காருக்கு இருந்த கவர்ச்சி குறைந்து விட்டது.

ஆனால் அந்தப் போரை இன அழிப்பு போர் என்று குற்றம் சாட்டும் ஒரு மக்கள் கூட்டம், அப்போரை முன்நின்று நடாத்திய ஒரு தளபதிக்கு, அந்தப் போரில் வெற்றி கொண்டதற்காகவே ஃபீல்ட் மார்ஷல் விருது பெற்ற ஒரு தளபதிக்கு, அந்தப் போர் நடந்து கிட்டத்தட்ட ஓராண்டு கழிந்திருந்த ஒரு காலகட்டத்தில், அந்தப் போரினால் அகதியானவர்கள் அப்பொழுதும் நலன்புரி நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், அந்த போரினால் காணாமல் போனவர்களை உறவினர்கள் தேடிப் போராட முடியாதிருந்த ஒரு காலச் சூழலில், அந்தப் போரில் கைது செய்யப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில் கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்தது.

கணிதத்தை விஞ்ஞானத்தை விரும்பிக் கற்கும் ஒரு மக்கள் எடுக்கக்கூடிய புத்திசாலித்தனமான முடிவா அது? அல்லது தீர்க்கதரிசனமும் துணிச்சலும் மிக்க முடிவா அது?

நிச்சயமாக இல்லை. அந்த ஜனாதிபதித் தேர்தலை சம்பந்தர் பாதிக்கப்பட்ட மக்களின் கூட்டுக் காயங்களுக்கு ஊடாகவும் கூட்டு மன வடுக்களுக்கு ஊடாகவும் சிந்தித்து இருந்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருந்திருக்கும். அவருடைய இறுதி ஊர்வலத்தில், தந்தை செல்வாவின் ஊர்வலத்தில் திரண்டதுபோல ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்திருப்பார்கள். ஆனால் நாடாளுமன்றத்தில் ஒப்பீட்டளவில் அதிக தமிழ் ஆசனங்களுக்குத் தலைமை தாங்கிய ஒரு தலைவர் அரசியலைக் கணிதமாக மதிப்பீடு செய்யத் தவறினார்.முடிவுகளை விஞ்ஞானபூர்வமாக எடுக்கத் தவறினார். குறைந்தபட்சம் முடிவுகளை இதயபூர்வமாக எடுத்திருந்தால் கூட நிலைமை வேறுவிதமாக அமைந்திருக்கும். அன்று எடுக்கப்பட்ட விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகளின் விளைவுதான் இன்றுள்ள தமிழ் அரசியலாகும்.

இவ்வாறாக கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ் அரசியலில் எடுக்கப்பட்ட புத்திபூ ர்வமற்ற விஞ்ஞானபூர்வமற்ற முடிவுகள் அனைத்தையும் தமிழ் மக்கள் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். காய்தல் உவத்தல் இன்றிப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.தமது வாழ்வின் அன்றாட தேவைகளுக்காக சுண்டிப் பார்த்து பொருட்களை வாங்கும் ஒரு மக்கள் கூட்டம், அரசியலிலும் அவ்வாறு சுண்டிப் பார்த்து முடிவெடுக்குமா? தமிழ்ப் பொது வேட்பாளருக்கு திரண்டு சென்று வாக்களிக்குமா

மணமகள் தேவை

கனடாவில் பிறந்த பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்து அரசாங்க வேலை செய்யும் 26 வயது நிரம்பிய மகனுக்கு தாயார் மணமகளைத் தேடுகின்றார். மணமகள் நல்ல குணமான, அழகான, படித்த, வேலையில் இருப்பவராக இருக்க வேண்டும். சாதி, மதம், சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.

தொடர்புகளுக்கு:- 1929 5037022

# மேற்குலகைப் புறந்தள்ளும் அனுர

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் அறிக்கை வெளியாகியிருக்கிறது. 39 ஜனாதிபதி வேட்பாளர்களில் முதலாவதாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டவர் அவர் தான். மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டு, விரிவான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்த தேர்தல் அறிக்கை. இதற்கு முன்னர் இவ்வளவு விரிவான ஒரு தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த தேர்தல் அறிக்கையில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு விடயங்களை, தனது அரசாங்கம் எவ்வாறு கையாள போகிறது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறார் அநுரகுமார திசாநாயக்க. அவர் தன்னை முழுமையாக தயார்படுத்திக் கொண்டே இந்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்கிறார். எனவே மிக விரிவாக ஒரு தேர்தல் அறிக்கையை அவர் வெளியிட்டிருக்கிறார்.

ஜே.வி.பி. இதுவரை காலமும் ஆட்சியில் அமராத கட்சி. இவர்களிடம் ஜனாதிபதி பதவியை கொடுத்தால் என்ன செய்வார்கள்? எப்படிக் கையாளுவார்கள்? அரசாங்கத்தை எப்படி நடத்துவார்கள்? வெளிநாடுகளுடன் உறவுகளை எப்படி வைத்துக் கொள்வார்கள்? என்பன போன்ற கேள்விகள் இருந்து வருகின்றன. இதனை ஒரு பலவீனமாக விமர்சிக்கின்ற போக்கும் உள்ளது. இத்தகைய கேள்விகள் எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கக் கூடிய ஒன்றாக, தேசிய மக்கள் கட்சியின் தேர்தல் அறிக்கை அமைந்திருக்கிறது. உள்நாட்டு அரசியல் பிரச்சினைகள், பொருளாதார பிரச்சினைகள் தொடக்கம் வெளிநாட்டு உறவுகள் வரைக்கும் இந்த தேர்தல் அறிக்கையில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதையும் இந்த தேர்தல் அறிக்கை முன்மொழியவில்லை. தமிழர்களின் பிரச்சினையை ஒரு தனித்துவமான பிரச்சினையாக தேசிய மக்கள் சக்தியோ அல்லது அதன் தாய் கட்சியான ஜே.வி.பியோ ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. அதனால் தமிழர் பிரச்சினைக்கு தனித்துவமான தீர்வு ஒன்றை வழங்குவது தொடர்பாக, எந்த வாக்குறுதியையும் இந்தத் தேர்தல் அறிக்கையில் காண முடியவில்லை.

அனைத்து மக்களையும் சமத்துவமான வகையில் நடத்தக் கூடிய புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் வாக்குறுதி மாத்திரமே, கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தான் பிரதானமானது. அதன் ஊடாக தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க முடியும் என தேசிய மக்கள் சக்தி கருதுகிறது. அதற்கு அப்பால் வேறெந்த தீர்வுகளையும் முன்மொழியவில்லை.

புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குதல் என்பது சாதாரணமான விடயம் அல்ல. ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படுகின்ற ஒருவரால், அதனை தனியாக செய்து விடவும் முடியாது. கடந்த காலத்தில் அரசியலமைப்பு மாற்றம் குறித்து வாக்குறுதி அளித்த ஜனாதிபதி வேட்பாளர்களால், அந்த முயற்சிகளில் வெற்றி பெற முடியவில்லை.

ஏனென்றால், பாராளுமன்றத்தில் அதற்கான பலம் தேவை. அது மாத்திரமன்றி சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அரசியலமைப்பு மாற்றங்களுக்கு மக்களின் ஆணையையும் பெற வேண்டும். தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலில் வெற்றியை பெற முடியும் என்ற கொண்டிருக்கிறது. நம்பிக்கையை கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டங்களுக்குப் பின்னரே, அநுரகுமாரவுக்கு அதிக ஆதரவு இருப்பதாக கருத்துக் கணிப்புகளின் ஊடாக தெரியவந்தது. அந்தக் கருத்து கணிப்புகளின் மீதான நம்பகத்தன்மை குறித்த கேள்விகள் இன்றைக்கும் எழுப்பப்படுகின்றன.

அந்த கருத்துக்கணிப்புகள் உண்மையானவையாக இருந்தால், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதி பதவியை நெருங்கக் கூடும். ஆனால், அவர் ஜனாதிபதியானால் கூட அரசியலமைப்பை மாற்றியமைத்து விட முடியாது. புதிய அரசியலமைப்பை கொண்டு வர வேண்டுமாயின், அதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும். அல்லது தேசிய மக்கள் சக்தி தயாரிக்கின்ற புதிய அரசியலமைப்பு எல்லா கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும்.



எல்லா தரப்புகளாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு அரசியலமைப்பை இன்றைய அரசியல் சூழலில் இலங்கையில் தயாரிக்க முடியாது. ஏனென்றால், கட்சிகள் மத்தியில் கொள்கை முரண்பாடுகளும் போட்டி பூசல்களும் அதிகரித்து காணப்படுகின்றன. யாரும் மேலாதிக்க நிலையில் இல்லாத ஒரு சூழலில், எல்லா கட்சிகளும் ஒன்றை ஒன்று குட்டி முந்திச் செல்லவே விரும்புகின்றன.

இப்படியான நிலையில் புதிய அரசியலமைப்பு தயாரிக்க முற்படுகின்ற போது குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுவதற்கு கட்சிகள் முன்வருமே தவிர, ஒன்றாகப் பயணிக்க முன் வரப் போவதில்லை. அதை விட தேசிய மக்கள் சக்தி முன்மொழிகின்றபடி எல்லா மக்களையும் சமமாக கருதுகின்ற ஒரு அரசியலமைப்பை உருவாக்கும் போது அதற்கு சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் எவ்வாறான பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் என்ற கேள்வியும் இருக்கிறது.

தமிழ் மக்களை திருப்திப்படுத்துகின்ற ஒரு அரசியலமைப்பு மாற்றம் என்றால், அது சமஷ்டி அரசியலமைப்புக்கான முன் மொழிவதாக இருக்க வேண்டும். ஜே.வி.பி ஒரு இடதுசாரி கட்சியாக இருந்தாலும், சமஷ்டி அரசியல் அமைப்பை எதிர்க்கிறது. அவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்பை சமஷ்டி முறையில் உருவாக்குவதற்கு ஜே.வி.பி. முன்வராது. சமஷ்டியை அடிப்படையாக கொண்டிராத அரசியலமைப்பை தமிழர் தரப்பு ஏற்றுக் கொள்ளாது.

ஒருவேளை, சமஷ்டி முறையிலான அரசியலமைப்பை தேசிய மக்கள் சக்தி தயாரிக்குமேயானால் அதற்கு சிங்கள தேசியவாத சக்திகளும் அனுமதிக்காது. இப்படி சாண் ஏறினால் முழம் சறுக்குவதாக இருக்குமே தவிர புதிய அரசியலமைப்பை உருவாக்குவது குதிரை கொம்பாக இருக்கும். பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்ட ஒரு சக்தியாக தேசிய மக்கள் சக்தி மாறக்கூடிய 16 சூழ்நிலை இருந்தால் தான், இந்த தேர்தல் அறிக்கையை நடைமுறைப்படுத்த முடியும். மாறாக ஜனாதிபதி பதவியில் இருந்து கொண்டு பாராளுமன்றத்தில் அதிகாரம் செலுத்த முடியாத நிலை இருந்தால், அநுரகுமார திசாநாயக்கவினால் எதையும் சாதிக்க முடியாது. அவருக்கு வாக்களிக்கும் மக்களுக்கும் எந்த பலனும் கிடைக்காது.

அநுரகுமார திசாநாயக்க இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றியாளராக தெரிவு செய்யப்படுவாரேயானால் தனது நாட்டிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என்ற கவலை இந்தியாவுக்கு இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னர் அநுரகுமார திசாநாயக்கவை இந்தியா புதுடெல்லிக்கு அழைத்து இது தொடர்பாக தனது நிலைப்பாட்டை அவருக்கு தெளிவுபடுத்தியிருந்தது. பிரதானமாக, இந்தியாவின் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எந்த வகையிலும் இலங்கை அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது என அவருக்கு திட்டவட்டமாக எடுத்துக் கூறப்பட்டது. இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் அநுரகுமார திசாநாயக்கவும் அதனை உறுதி செய்திருந்தார்.


இப்போது வெளியாகியிருக்கின்ற அவரது தேர்தல் அறிக்கையும் இந்தியாவுக்கு வாக்குறுதி வழங்கக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது. இந்தியா உட்பட பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது ஆபத்து ஏற்படும் வகையில், இலங்கையின் நிலப்பகுதி கடற்பரப்பு மற்றும் வான்பரப்பை பயன்படுத்துவதற்கு எந்தவொரு நாட்டுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் இடமளிக்கப்படாது என வெளிப்படையாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, இந்து சமுத்திரத்தில் வெளிநாட்டு இராணுவ முகாம்கள் மற்றும் அதற்கு இணையான இராணுவ ஒப்பந்தங்கள் மூலம், இராணுவமயமாக்கல் முயற்சிகளுக்கு எதிரான நிலையான கொள்கையை கொண்டிருக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுடன் உறவுகள் பேணுவது தொடர்பான எந்த வாக்குறுதியும், இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருக்கவில்லை.

ஜி20 நாடுகள், பிரிக்ஸ், ஆசியான் நாடுகள், தெற்காசிய மத்தியகிழக்கு, மற்றும் ஆபிரிக்க கண்டத்துடன் இராஜதந்திர பொருளாதார மற்றும் கலாசாரத் தொடர்புகளை மேம்படுத்தல் மற்றும் வலுவூட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு சம்பவங்களுக்கு அமைவாக சர்வதேச சிக்கல்களுக்கு அமைவாக சுயாதீன நிலைப்பாட்டினை பேணிச் செல்லல் மற்றும் எவ்வித இராணுவ


கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்

கூட்டமைப்புடனும் இணைந்து கொள்ளாமை அல்லது அழுத்தத்திற்கு உட்படாமல் இருப்பதை உறுதி செய்யவும் தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி கொடுத்திருக்கிறது. இலங்கைக்குள் எவ்வித செயற்பாடுகளுக்காகவும் வெளிநாட்டு இராணுவத்தினருக்கு அனுமதி வழங்குவதில்லை என்றும், தீவிரவாதம், பிரிவினைவாதம், இனவாதம், கடற்கொள்ளை மற்றும் வேறு பாரம்பரியமற்ற பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடுவதற்காக தென்கிழக்காசிய மற்றும் ஆசிய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதை வலுப் படுத்துவதென்றும் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குள் சீனாவை உள்வாங்குவது குறித்து மறைமுகமாக திட்டமிடப்பட்டிருக்கின்ற அதேவேளையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் பாதுகாப்பு கரிசனையை மாத்திரம் நிவர்த்தி செய்தால் போதும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கரிசனைகளை கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்ற ரீதியிலேயே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கை அமைந்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் அமெரிக்கா மற்றும் மேற்குலகம், அநுரகுமாரவின் மீது சந்தேகம் கொள்வது தவிர்க்க முடியாதது. இந்தியாவும் கூட இந்த விடயத்தில் எந்தளவுக்கு நம்பிக்கை வைக்கும் என்பது சந்தேகம் தான்.

அதேவேளை, இந்த வாக்குறுதிகள் இந்தியாவுக்கோ அமெரிக்காவுக்கோ மேற்குலகத்துக்கோ அல்ல. உள்நாட்டு வாக்காளர்களுக்கானது. அவர்கள் இதனை எவ்வாறு புரிந்து கொள்ளப் போகிறார்கள் என்பதை பொறுத்தே அநுரகுமார திசாநாயக்கவின் வெற்றி தீர்மானிக்கப்படும்.

ஆனாலும் உள்நாட்டு தேர்தல்களில் வெளிநாட்டு தலையீடுகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்ற நிலையில் தனியே அவரது தலைவிதியை உள்நாட்டு மக்கள் மாத்திரம் தீர்மானிப்பார்கள் என்று கருத முடியாது.


## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கனேடிய பிரஜாவுரிமை பெற்ற இந்து மதத்தைச் சேர்ந்த குல மகளுக்கு பெற்றோர்கள் தகுந்த வரன் தேடுகின்றனர். உயரம் 5 அடி 4 அங்குலம்.

Born in 1989 & Non Vegetarian

Doctor of Medicine (MD) – Doing Residency in USA

Proposal from Canada, USA - (From UK, Australia, Sri Lanka & other Countries who is willing to relocate to USA also will be considered)

தொடர்புகளுக்கு: 416 282 1619 அல்லது
416 953 8297(Mobile/WhatsApp/Viber)

Email. Kandiah4u@hotmail.com

# பொது வேட்பாளர்:- தமிழ்த்தேசியத் தீவிரவாதியா?



அனுர ரணில் சஜித் ஆகியோரின் தேர்தல் அறிக்கைகள் வெளி வந்து விட்டன. எதிர்பார்க்கப்பட்டது போல அவை அமைந்திருக்கின்றன. 13க்கு அப்பால் அவர்களிடம் தீர்வு கிடையாது. மேலும் இனப் பிரச்சனைக்கான தீர்வை நோக்கி உருவாக்கப்படும் புதிய யாப்பு அடுத்த நாடாளு மன்றத்தில் தான் தீர்மானிக்கப்படும்.

இப்பொழுது கேள்வி என்னவென்றால், பிரதான தென்னிலங்கை வேட்பாளர்கள் எதைத் தர கூடும் என்பது தெளிவாகக் கூறப்பட்டு விட்டது. தபால் மூல வாக்கெடுப்புக்கு சில நாட்களே உண்டு.

தமிழரசுக் கட்சி அதன் உத்தியோக பூர்வ முடிவை 30 ஆகஸ்ட் 2024 இக் கட்டுரை எழுதப்படும் நாள் வரை அறிவிக்கவில்லை. ஆனால் அதன் திருகோணமலைக் கிளை பொது வேட்பாளருக்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து கிளிநொச்சிக் கிளையும் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. கட்சியின் கீழ் மட்டத்தில் பொது வேட்பாளருக்கு ஆதரவான அலை எழத் தொடங்கி விட்டது. அதை மேற் சொன்னை இரண்டு மாவட்டக் கிளைத் தீர்மானங்களும் நமக்கு உணர்த்துகின்றன.

இதனிடையே சுமந்திரன் தனது twitter பக்கத்தில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார். தமிழ் வாக்குகள் பெருந்தொகையாக அரியநேந்திரனுக்கு விழுமாக இருந்தால், தமிழ் அரசியலின் போக்கு மேலும் தீவிர நிலைப்பாட்டை நோக்கித் திரும்பும். தமிழ் வாக்குகள் அரியநேத்திரனுக்குக் குறைவாக விழுந்தால் தமிழ்த் தேசிய அரசியல் போக்கு பலவீனமடையும். விளைவு எதுவாயினும், இறுதியிலும் இறுதியாக இழப்பு தமிழ் மக்களுக்குத் தான்.

சுமந்திரன் கூறுவது போல தமிழ்த் தேசிய தீவிரவாத நிலைப்பாடு என்பது என்ன? ஒரு பொது வேட்பாளரின் நிலைப்பாடு தமிழ் தேசிய தீவிரவாத நிலைப்பாடு என்று அவர் கூற வருகிறார். பொது வேட்பாளர் நாட்டை பிரிக்க சொல்லி கேட்கிறாரா? அவர் தெளிவாகக் கூறுகிறார்.தமிழ் மக்களை ஒன்று திரட்டப் போகிறோம் என்று. திரண்ட தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை உரத்த குரலில் சமரசத்துக்கு இடமின்றிக் கூறுவார்கள். அவ்வளவு தான். தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன வேண்டும் என்பதனை பலமான குரலில் பலமான நிலையில் நின்றபடி கூறுவது தீவிர வாதமா?

தமிழ் மக்கள் ஒற்றுமைப்படுவது தீவிர வாதமா? தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வது தீவிரவாதமா? இல்லை. தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வது என்பது இலங்கைத் தீவின் பன்மை தேசிய பண்பை பலப்படுத்துவதற்காகத் தான். முதலில் தமிழ் மக்கள் ஒரு தேசமாக பலப்பட வேண்டும். அதாவது தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை, தேசிய இனம் என்பதை சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் போது தான் இலங்கைத் தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் அல்லது தேசிய இனங்கள் உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்படும். அது தான் இலங்கைத் தீவின் இன யதார்த்தம். அதை ஏற்றுக் கொள்வது தான் இலங்கை தீவை ஐக்கியமாகக் கட்டி எழுப்ப ஒரே வழி. அது தான் இலங்கைத் தீவின் இறைமையை பாதுகாக்கும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும். எனவே தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வது இலங்கைத் தீவை உடைப்பதற்காக அல்ல. இலங்கைத் தீவை ஒரு பலமான நாடாக கட்டி எழுப்புவதற்காகத் தான்.

தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தை முன் வைத்த கருத்துருவாக்கிகள் தமிழ் மக்கள் பொதுச் சபையை தொடங்கிய பொழுது அதன் அமர்வுகளில் ஒரு விடயத்தை திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டினார்கள். தென்னிலங்கை வேட்பாளர்கள் என்ற வார்த்தையை பாவியுங்கள். சிங்கள வேட்பாளர்கள் என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம் என்று.

ஏனென்றால் தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் பொசிட்டிவ் ஆனது. அது நெகட்டிவ் ஆனது அல்ல. ஆனால் அவ்வாறு தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்துவது தீவிரவாதம் என்று சுமந்திரன் கருதுகின்றாரா?

தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் திரட்டுவது தானே? இந்த அடிப்படை உண்மை தெரியாமலா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைத்தார்கள்? இந்த அடிப்படை உண்மை தெரியாமலா தனியோட்டம் ஓடினார்கள்? இந்த அடிப்படை உண்மை தெரியாமலா இப்பொழுதும் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக கருதுரைப்பதாக கூறிக் கொண்டு தமிழ் மக்களைச் சிதறடிக்க முற்படுகிறார்கள்?

ஆனால் அவருடைய கட்சியின் அடிமட்டம் அவருக்கு எதிராக முடிவு எடுக்க தொடங்கிவிட்டது. இரண்டு மாவட்ட கிளைகள் அந்த முடிவை வெளிப்படையாக அறிவித்து விட்டன. இனி வரும் நாட்களில் ஏனைய மாவட்ட கிளைகள் மத்தியிலும் அது நொதிப்பை ஏற்படுத்தும். அதன் விளைவாக தமிழ் பொது வேட்பாளரின் ஆதரவுத் தளம் மேலும் பலமடையும் பரவலடையும்.

தமிழ் பொது வேட்பாளரின் நோக்கம் எந்த ஒரு கட்சியையும் உடைப்பது அல்ல. உடைந்து கிடப்பவற்றைச் சேர்ப்பது தான். ஒரு நெல்மணி கூட வீணாக சிந்தக் கூடாது என்று அவர்கள் கூறுகிறார்கள். தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு எல்லாருக்குமானது அது அதற்குள் வராத கட்சிகளுக்குமாக எப்பொழுதும் திறக்கப்பட்டு இருக்கின்றது என்று தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரதிநிதிகள் திரும்பத் திரும்பக் கூறுகின்றார்கள். எனவே தமிழ் பொது வேட்பாளருக்கு வெளியே நிக்கும் கட்சிகள் தமிழ்த் தேசிய கட்டமைப்பை விரோதமாக பார்க்கத் தேவையில்லை.

பொது வேட்பாளருக்கு ஆதரவாக துண்டு பிரசுரங்களை விநியோகிக்கச் செல்லும் பொழுது மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், ஒரு உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் கட்சி அரசியலின் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள். அரசியலில் அவர்கள் ஏறக்குறைய சலிப்படைந்து விட்டார்கள். ஒரு பகுதியினர் விரக்தி அடைந்தும் விட்டார்கள். இது ஆபத்தான ஒரு வளர்ச்சி. பொதுவாக கட்சி அரசியல் எனப்படுவது அதன் ஆதரவாளர்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்த்தெடுப்பது தான். மக்களை ஓர் அரசியல் சமூகமாகத் திரட்டுவது தான். நம்பிக்கை இழந்தவர்களை வைத்து கட்சியைக் கட்ட முடியாது. நம்பிக்கை இழந்தவர்களை வைத்து நாட்டையும் கட்டி எழுப்ப முடியாது. தேசத்தையும் கட்டி எழுப்ப முடியாது. எனவே தேர்தல் வார்த்தைகளில் கூறின், தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டும். தமிழ் பொது வேட்பாளர் அதைத்தான் செய்ய முயற்சிக்கிறார்.

கிழக்கில் இருந்து வந்திருக்கும் ஒரு அரசியல்வாதி அவ்வாறு தமிழ்த் தேசிய அரசியலில் நம்பிக்கையை, திரட்சியை கட்டி எழுப்பும் குறியீடாக மாறி வருவது என்பது தமிழ் மக்களின் தாயக ஒருமைப்பாட்டை மேலும் பலப்படுத்தும் பாதுகாக்கும்.

வடக்கும் கிழக்கும் ஏற்கனவே சட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்டு விட்டன. அரசாங்கம் திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான நிலத் தொடர்ச்சியை அறுப்பதில் கணிசமான வெற்றிகளைப் பெற்று வருகிறது. தவிர நிர்வாக அலகுகளை இணைப்பதன் மூலமும் வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான பிணைப்புகள் அறுக்கப்படுகின்றன. நில ஒருமைப்பாடு இல்லையென்றால் தாயகம் இல்லை. தாயகம் இல்லை என்றால் தேசியவாதமும் இல்லை. எனவே வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைப்பது என்று முடிவு எடுத்து கிழக்கிலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கும் ஒரு பொது வேட்பாளர் தமிழ் ஐக்கியத்தின் குறியீடாகவும் தமிழர் தாயக ஒருமைப்பாட்டின் குறியீடாகவும், தமிழ் ஐக்கியத்தின் குறியீடாகவும் மேல் எழுவாரா இல்லையா என்பதை தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கு அள்ளிக் கொடுக்கப் போகும் வாக்குகளின் தொகை தான் தீர்மானிக்கும்.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்


“இணுவில் திருவூர்”

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




# மணமகள்

# மணமகன்



**ID08120764 F**
31yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager HR , Sri Lanka

**ID08120762 F**
43yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120760 F**
29yrs, 5'3" , Single , Visaakam , 6 Sevai , Bachelors.. , Admin Data.. , Canada

**ID08120767 M**
33yrs, 6' , Single , Not Specified , N/A Sevai , Diploma , CUSTOMER Service.. , Sri Lanka

**ID08120766 M**
34yrs, 5'4" , Single , Pooraadam ,N/A Sevai , Diploma , Work , Canada

**ID08120765 M**
51yrs, 5'6" , Divorced , Aayilyam , N/A Sevai , Postgraduate.. , Book keeping.. , Canada

**ID08120759 F**
27yrs, 4'9" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120757 F**
41yrs, 5'9" , Single , Aswini , N/A Sevai , Diploma , Administrative , Sri Lanka

**ID08120755 F**
26yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Prof , Canada

**ID08120763 M**
34yrs, 5'9" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Business Administration , Sri Lanka

**ID08120761 M**
33yrs, 5'8" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , Own jewelry.. , Sri Lanka

**ID08120758 M**
41yrs, 5'11" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , IT , Australia

**ID08120754 F**
24yrs, 5'1" , Single , Bharani , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08120756 F**
41yrs, 5'9" , Single , Aswini , N/A Sevai , Diploma , Administrative , Sri Lanka

**ID08120753 F**
42yrs, 5'5" , Single , Revathi , N/A Sevai , High School , Store keeper , France

**ID08120753 M**
42yrs, 5'5" , Single , Revathi , N/A Sevai , High School , Store keeper , France

**ID08120751 M**
33yrs, 5'7" , Single , Thiruvonam , 11 Sevai , Bachelors.. , General practitioner , United Kingdom

**ID08120749 M**
24yrs, 5'10" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120752 F**
38yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Senior finance.. , Sri Lanka

**ID08120750 F**
26yrs, 4'11" , Single , Aswini , 6 Sevai , High School , Teacher , Sri Lanka

**ID08120748 F**
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Non , Canada

**ID08120747 M**
48yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Business , Canada

**ID08120745 M**
35yrs, 5'7" , Single , Pooraadam , N/A Sevai, Diploma , Welting ,Canada

**ID08120724 M**
30yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior engineer , Sri Lanka

**ID08120744 F**
39yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Own Business.. , Sri Lanka

**ID08120743 F**
38yrs, 5'3" , Single , Thiruvonam , N/A Sevai , Masters Degre , Senior Finance.. , Sri Lanka

**ID08120742 F**
25yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , IT Assistant , Sri Lanka

**ID08120746 M**
35yrs, 5'8" , Single , Swaathi , N/A Sevai , Ph.D , Postdoctoral.. , Sri Lanka

**ID08120741 M**
23yrs, 6'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Not Specified , Canada

**ID08120740 M**
60yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Masters Degre , Engineer , Sri Lanka

**ID08120732 F**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120741 M**
23yrs, 6'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Not Specified , Canada

**ID08120739 M**
30yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineer , Sri Lanka

**ID08120738 M**
30yrs, 5'9" , Single , Bharani , N/A Sevai , Postgraduate.. , Student , Canada

**ID08120723 F**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120737 M**
28yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Testing , Sri Lanka

**ID08120736 M**
36yrs, 5'9" , Single , Aayilyam , N/A Sevai , High School , Train ambassador , Sri Lanka

**ID08120735 M**
33yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Goverment.. , Sri Lanka

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120739 M**
30yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineer , Sri Lanka

**ID08120734 M**
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120733 M**
27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08120711 F**
30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120695 F**
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120685 F**
22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120731 M**
33yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Postgraduate.. , HDFC bank.. , Sri Lanka

**ID08120730 M**
29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka

**ID08120720 M**
35yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Teacher , Sri Lanka

**ID08120675 F**
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667 F**
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650 F**
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120719 M**
28yrs, 5'8" , Single , Kettai , 12 Sevai , Bachelors.. , Software Engineer , Sri Lanka

**ID08120716 M**
18yrs, 4' , Divorced Not Specified , N/A Sevai , None , Hrhsehsh , Canada

**ID08120710 M**
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# ரணிலின் துணிவும் ஏனைய வேட்பாளர்களும்

நெருக்கடி காலத்திலிருந்து நாட்டை மக்களை மீட்டது தானே என்கிறார் ரணில் விக்கிரமசிங்க. அதாவது தானொரு மீட்பர், ஆபத்பாந்தகர் என்றெல்லாம் சொல்கிறார்.

அன்றைய நெருக்கடிச் சூழலில் யாருமே பொறுப்பேற்க முன்வராத போது தனியாளாக முன் வந்து அந்தப் பொறுப்பைத் துணிவுடன் ஏற்றேன். நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காகச் சஜித்தையும் அநுரவையும் கூட அழைத்தேன். அதைப் போல தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் மலையகக் கட்சிகளையும் முஸ்லிம்களையும் கேட்டிருந்தேன். யாரும் வரவில்லை.

ஆனாலும், இணைந்து பணியாற்றக் கூடியவர்களைச் சேர்த்து ஆட்சியை அமைத்தேன். அதன் மூலம் பொருட்களுக்காகக் காத்திருக்கும் வரிசை யுகத்தை மாற்றினேன். விவசாயிகளுக்கு உரத்தைத் தந்தேன். பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கினேன்.... நாம் இனி வாழமுடியுமா என்று நம்பிக்கையற்றிருந்த மக்களை நிம்மதியோ, அச்சமின்றி வாழ்க்கையைத் தொடரக் கூடியவாறான சூழலை உருவாக்கினேன். அப்படிச் செய்தேன். இப்படிச் செய்தேன்.. என்று ஏராளமாகச் சொல்லிச் செல்கிறார் ஜனாதிபதி.

இதில் சில உண்மைகளுண்டு. மறுக்க முடியாது. ரணில் சொல்வதைப் போல (அவர் விரும்பியதைப் போல அல்ல) தேசிய அரசாங்கத்தை அமைத்திருக்க வேண்டும். அது பொருளாதாரப் பிரச்சினையையும் இனப்பிரச்சினையையும் தீர்க்கும் முகமாகச் செயற்பட்டிருக்க வேண்டும். கூடவே நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது உட்படப் பலவற்றைச் சீர்செய்திருக்க முடியும். முக்கியமாக அரசியலமைப்பை மாற்றியிருக்கலாம். குறைந்த பட்சம் அதை நோக்கி நகர்ந்து சாத்தியமான பலவற்றையும் செய்திருக்கலாம்.

தேசிய அரசாங்கத்தில் இணைந்திருந்தால் ஒருவரை ஒருவர் சாட்டித் தப்பி விட முடியாது. ஏனென்றால் அனைத்துத் தரப்பினரும் பங்காளிகள். அதில்லாத போது ஒருவரையொருவர் குற்றம் சாட்டியோ அல்லது எதிர்ப்புக் காட்டியோ தப்பி விடலாம். அப்படித் தான் ஒவ்வொருவரும் இழிவான முறையில் தங்கள் தங்கள் அரசியலைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டைப் பற்றியோ மக்களைப் பற்றியோ இவர்கள் நேர்மையாக விசுவாசமாகச் சிந்திக்கவில்லை. அந்த நெருக்கடிச் சூழலில் நாட்டைப் பொறுப்பேற்குமாறு தன்னை 71 தடவை அழைத்தார்கள். நான் செல்லவில்லை. அப்படிப் பொறுப்பேற்றிருந்தால் அது கள்வர்களைப் பாதுகாப்பதாகவே முடிந்திருக்கும். அதை நான் விரும்பவில்லை'' என்று இப்பொழுது சஜித் பிரேமதாச பெருமையாகச் சொல்கிறார்.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நாட்டைப் பொறுப்பேற்று, ஆட்சியைப் பலப்படுத்திக் கொண்டு கள்வர்களைப் பிடித்துச் சிறையில் தள்ளி, ஊழலைக் கட்டுப்படுத்தியிருக்கலாம் அல்லவா! இதையே செய்திருக்க வேண்டும் சஜித்.

அப்படிச் செய்யாமல் விட்டதால் தான் அவர்கள் ரணில் அரசாங்கத்தில் பாதுகாக்கப்பட்டனர். ஊழல் தொடர்ந்தது.

தவிர, ரணிலின் அழைப்பை ஏற்றுத் தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொண்டு செயற்படும் போது, ரணில் விக்கிரமசிங்க, தேசிய அரசாங்கத்திற்குரிய பொதுப் பண்புக்கு மாறாகச் செயற்பட முனைந்திருந்தால் அதை



மக்களுக்குச் சொல்லி விட்டு (நிரூபித்துக் கொண்டு) அதிலிருந்து விலகியிருக்கலாம். அதுவே சரியானது.

ஆனால் அப்படி எதுவும் நடக்கவேயில்லை. தேசிய அரசாங்கத்திற்கான வற்புறுத்தல்களை இலங்கையின் புத்திஜீவிகள், சமூகச் சிந்தனையாளர்கள், அரசியல்வாதிகளுக்கு ஆசீர்வாதம் வழங்குகின்ற மதத்தலைவர்கள் எவரும் செய்யவில்லை.

இதனால் அரசியற் கட்சிகளைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் நிலையிலிருந்தே, தங்களின் பாரம்பரியச் சிந்தனை முறையிலிருந்தே சிந்தித்தனர், செயற்பட்டனர். எவரும் நாட்டின் தேசிய நெருக்கடி, தேசியப் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வு என்று சிந்திக்கவில்லை.

பதிலாக தனியொருவராக (ஒற்றை ஆளாக) நிற்கும் ரணில் விக்கிரமசிங்க தன்னைப் பலப்படுத்துவதற்காக, பிறரைப் பயன்படுத்துவதற்காக, தந்திரோபாயத்தின் அடிப்படையில் தான் பலரையும் அழைக்கிறார் எனச் சொல்லப்பட்டதுண்டு.

தனியொருவராக நிற்கும் ரணில் எப்படி ஆளுமையும் நேர்மையும் உள்ள மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்? அவர்கள் தங்கள் ஆளுமையினாலும் நேர்மையினாலும் ரணில் விக்கிரமசிங்கவை அம்பலப்படுத்தியிருக்கலாம். கட்டுப்படுத்தியிருக்க முடியும் என்பதால் அன்றைய சூழலை இழந்தது தவறேயாகும்.

இலங்கையின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வை எட்டக் கூடியதாக அந்த நெருக்கடிச் சூழல் அனைவருக்குமான பொறுப்பை ஏற்குமாறு அழைத்தது. பொதுவாகவே நெருக்கடியொன்றின் போது தான் அனைத்துத் தரப்பும் ஒருமுகப்பட்டுச் செயற்படக்கூடிய சூழலும் உளநிலையும் உருவாகும். உதாரணம், சுனாமி அனர்த்தச் சூழல்.

அந்தப் பேரிடரின் போது புலிகளும் அரசும் தமிழரும் சிங்களரும் முஸ்லிம்களும் என எதிரெதிர்த் தரப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து பேதங்களின்றிப் பணியாற்றினர். அதொரு முன்னுதாரணமாகப் பேசப்பட்டது. அதிலிருந்து நல்லெண்ணச் செயற்பாடுகள் உருவாக்கப்பட்டிருந்தால் பிந்திய இலங்கையின் பேரழிவுகளும் இன்றைய பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருக்காது. இன்னொரு சந்தர்ப்பம், கொரோனா பெருந் தொற்றுக்காலப் பேரிடர்ச் சூழல். அதன் போதும் அனைத்துத் தரப்பினரிடத்திலும் ஒரு ஒற்றுமை உணர்வு மேலோங்கியிருந்தது. இனவாதம் தணிந்திருந்த சூழல்களிவை. ஆகவே இலங்கையின் பொருளாதார நெருக்கடி யோடிணைந்த அந்த நெருக்கடிச் சூழலை அனைத்துத் தரப்பும் இலங்கையை மீட்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதற்கான கரு நிலை அறகலயவின் மூலம் உருவாக்கப்பட்டிருந்தது. அறகலயவில் நேரடியான அரசியற் கட்சிகளுக்கு அப்பாலுள்ள அனைத்துத் தரப்பும் ஒன்றிணைந்து நின்றது. மட்டுமல்ல, இனப்பிரச்சினையைப் பற்றிய புரிதலும் அங்கே ஓரளவு காணப்பட்டது. அல்லது அதைப் பற்றிப் பேச வேண்டும் என்ற உணர்வு அங்கே இருந்தது.

ஆகவே அதையொட்டி, அதற்குப் பின் வரவிருந்த தேசிய அரசாங்கம் என்பதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு அனைவரும் செயலாற்ற முன்வந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு சஜித்தும் அநுரவும் ஏனைய தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகளும் சம்மதிக்கவில்லை. எல்லோருக்கும் இனவாதம் தேவைப்பட்டது. அதை விட்டு அரசியல் செய்து பழக்கமில்லை. இதனால் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்குப் பின்னின்றனர். அவர்கள் சொன்ன காரணங்கள், ஏற்றுக் கொள்ள முடியாதவெறும் சாட்டுகளே. அதிலொன்று, ரணிலை நம்ப முடியாது. அவர் சூழ்ச்சிக்காரர். ராஜபக்ஸக்களை (திருடர்களை) காப்பாற்றுபவர். அவர் வெளிச்சக்திகளின் நிகழ்ச்சிகளுக்காகச் செயற்படுகின்றவர் போன்றனவாகும். இதிலும் உண்மையுண்டு. ஆனால், ஏற்புடையதல்ல. ஏனென்றால்

ஒன்று, வெளிச்சக்திகள் ரணிலை மட்டுமல்ல, அதிகாரத்திலிருப்போரையும் அதிகாரத்திற்கு வெளியே இருப்போரையும் தான் கையாளகைப் பொம்மைகளாக வைத்திருப்பதற்கு முயற்சிக்கின்றன. சஜித் பிரேமதாசா, அநுரகுமார திசநாயக்க, சுமந்திரன், மனோ கணேசன், ஹக்கீம், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சந்திரகுமார் போன்றவர்களைப் பிற நாட்டுத் தூதர்கள் சந்திக்கிறார்கள்.

தங்களுக்குப் பொழுது போகவில்லை என்பதற்காகவா இந்தச் சந்திப்பையெல்லாம் ஒவ்வொரு நாட்டுத் தூதுவர்களும் நடத்துகின்றனர்?

அல்லது இவர்கள் இந்தத் தூதர்களைச் சந்திப்பது ஏதோ அன்புறவு காரணமாகவா? எல்லாவற்றுக்குப் பின்னும் நிகழ்ச்சி நிரல்களுண்டு. ஆகவே பிறருடைய நிகழ்ச்சி நிரல்கள் எப்போதுமிருக்கும். அது யார் அதிகாரத்துக்கு வந்தாலும் தொடரும். அதிகாரத்தில் இல்லாத சக்திகளையும் அவர்கள் நாடிபிடித்துப் பார்ப்பர். எனவே இதை ஒரு காரணமாகச் சொல்லித் தப்ப முடியாது.

அப்படித் தான் ரணிலை நம்ப முடியாது என்பதும். அவர் ஒரு சூழ்ச்சிக்காரர். சேர்ந்திருப்போரையே அனைத்துக் கெடுத்து விடுவார். கட்சிகளை உடைப்பதில் வல்லவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. அரசியலில் போட்டியிருக்கும். இந்த மாதிரிச் சூழ்ச்சிகளும் இருக்கும். அரசியலென்பதே போட்டிகளின் களம் தான். முரண்பாடுகளின் இயக்கம் தான்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



சூழ்ச்சிகள் இடையறாது நிகழும் ஆட்டமே. ஆகவே அதற்கேற்ற காய் நகர்த்தல்களும் காய் வெட்டுகளும் நடக்கும். ஒரே கட்சிக்குள், ஒரே அமைப்புக்குள், ஒரே அணிக்குள் கூட இதெல்லாம் நடந்து கொண்டு தானிருக்கின்றன. அப்படியில்லாத ஒரு அணியை ஒரு கட்சியை யாராவது காட்டுங்கள் பார்க்கலாம்.

தங்கள் அணிக்குள் வெட்டுக்குத்துகளும் குழிபறிப்புகளும் முரண்பாடுகளுமிருப்பதைப் போலவே வெளியிலும் இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏன், இப்படிச் சொல்வோர் தமது அணிக்குள்ளும் வெளியிலும் போட்டியாளர்களை முறியடிப்பதற்கும் வெட்டியெறிவதற்கும் முயற்சிப்பதில்லையா? எனவே ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றிய இந்தக் குற்றச் சாட்டுகளும் ஏற்புடையவையில்லை.

ஆகவே இந்த மாதிரியான சிறுபிள்ளைத்தனமான சாட்டுப்போக்குகளைக் கடந்து தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்குச் சஜித்தும் அநுரவும் முன் வந்திருக்க வேண்டும். இருவரும் இளைய தலைமுறையினர். அப்படி இருவரும் வந்திருந்தால் உரிய பொறுப்புகளை ஏற்றுத் திறம்படச் செயற்பட்டிருந்தால், தங்களுடைய செயற்பாட்டுத் திறனால் இன்று மிகப் பெரிய ஆளுமைகளாக மிளிர்ந்திருப்பர். நாடும் கணிசமான அளவுக்கு மீண்டிருக்கும். வயோபதிரான, ஒற்றையாளான ரணில் விக்கிரமசிங்கவை களத்திலிருந்தே அப்புறப்படுத்தியிருக்க முடியும். அவருடைய பலத்தையும் ஒளிவட்டத்தையும் இல்லாதொழித்திருக்க முடியும். ஆனால் நடந்தது என்ன?

ஒற்றையாளான தனியனான ரணில், முதிய வயதில் தனிக்காட்டு யானையாக மெல்ல மெல்லச் சூழலைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். பதவியே இல்லாமல் தன்னுடைய வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தவர், கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாடுமுழுக்கச் சென்று தன்னை நிலைப்படுத்தினார். இதற்கு வாய்ப்புக் கொடுத்தால் அவர் அதைச் செய்யத் தானே செய்வார்!

அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவரில்லை. பின் கதவு வழியாக வந்தவர் என்ற பரிகாசமெல்லாம் அரசியலில் எடுபடாது. நீங்கள் களத்தில் நிற்கிறீர்களா இல்லையா என்பதே முக்கியமானது. ஜனாதிபதியாகப் பதவியேற்று ரணில் களத்தில் நின்றதே அவர் இன்று போட்டிக்குரிய வேட்பாளராக மாறிப்பதற்கான காரணம்.

2020இல் ரணில் தோற்றுப் போன ஒருவர். அவரிடம் கட்சியும் இருக்கவில்லை. வெற்றியும் இருக்கவில்லை. ஏறக்குறைய அரசியலுக்கு முழுக்குப் போடும் நிலையில் இருந்தார். இன்று? சவாலுக்குரிய போட்டியாளராக ஒரு இளைஞரைப்போல களத்தில் நிற்கிறார். செடியை முளையிலேயே கிள்ளாமல் விட்டால், அல்லது நமக்கு வாய்ப்புக் கிட்டும்போது அதைக் கை விட்டால் அது நம்மையே பதம் பார்த்து விடும்.

# அமரர் அ.வ.பாலசுப்பிரமணியம் அவர்களது 95வது பிறந்த நாளும் 40வது அமரத்துவ தினமும்

**அமரர் அ.வ.பாலசுப்பிரமணியம்**

**மண்ணில்:- 26.08.1929**

**விண்ணில்:- 30.05.1984**

முன்னாள் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் (தலவாக்கல)

முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளர் (மட்டக்களப்பு, அம்பாறை)

இன்று அவரது 95வது பிறந்த தினமும் 40வது அமரத்துவ தினமுமாகும்.

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்டவர். தலவாக்கல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஸ்தாபகர், அதிபர்.

மயிலிட்டி சங்குவத்தை மாணிக்கப் பிள்ளையார் கோவில் ஸ்தாபகரின் ஏக புத்திரன்.

அன்னார் கொழும்பு வித்தியோதயா சர்வகலாசாலையில் சிங்கள மொழியில் B.A சித்தியடைந்தார். நீண்ட காலமாக மட்டக்களப்பு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அங்கு பயிற்றுவிக்கும் காலத்தில் சாரணியத் துறையின் வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டார்.

கிழக்கிலங்கையில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு சாரணியத்தைப் பயிற்றுவிப்பதில் பெரும் பங்காற்றினார். அக்காலத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சாரணிய ஆணையாளராகவும் கடமையாற்றினார்.

சாரணியத்தின் அதியுச்சப் பதவியான பதில் பாசறைப் பதி(Deputy Camp Chief) என்ற அதியுயர் பதவியை வகித்தார். இலங்கை வரலாற்றில் தமிழர்கள் எவரும் இதுவரையில் இப் பதவியை வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில், கனடாவில் நடைபெறும் சாரணர் பாசறைப் பூங்காவிற்கு (யாழ் சுப்பிரமணியம் பூங்கா) வருகை தந்து யாழ் மாணவர்களுக்கும் சாரணியம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

சிறந்த முறையில் பாசறை ஒழுங்குகளை மேற்கொண்டு சாரண முடிச்சுக்கள் போடுதல், பாலங்கள் கட்டுதல் போன்ற ஆலோசனை வழங்கி சாரணியத்தை வளர்க்க உதவினார்.

தமிழ் சிங்கள மொழிகளில் சாரணியப் பாடல்களை இயற்றி பாசறைகளில் சாரணர்களுக்கு தானும் பாடி மகிழ்வித்தார். வீட்டு மிருகங்கள் மீது அதீத அன்பு காட்டுவார். வீதியில் அனாதரவாக உள்ள விலங்குகளில் கூட தன் கருணையைக் காட்டத் தவறுவதில்லை.

மும்மொழிகளிலும் கவிதை எழுதுவதில் வல்லவர். கிழக்கு மாகாணத்திற்கு முன்னாள் ஜனாதிபதிகள், ஜே.ஆர் ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சிறீமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் வருகை தரும் போது அவர்கள் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் பேசுவதை இவர் தமிழில் மொழிபெயர்ப்பார். வருடாவருடம் கதிர்காமத்திற்கும், செல்லக் கதிர்காமத்திற்கும், செல்வச் சந்நிதிக்கும் செல்லத் தவறுவதில்லை.



மலையக மக்களுக்காக ஒரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை நிறுவுவதற்கு முன்னாள் அமைச்சர் திரு தொண்டமானின் அனுமதியைப் பெற்று தேயிலைத் தொழிற்சாலையாக இருந்த ஒரு கட்டிடத்தை தானும் ஆசிரிய மாணவர்களும் சேர்ந்து இடித்துத் திருத்தி ஆசிரிய கலாசாலை ஒன்றை முதன் முதலில் உருவாக்கினார். அது இப்போது வளர்ச்சி பெற்று கொட்டகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக வளர்ந்து நிற்கிறது.

இத்தகையை சிறப்பு மிக்க தலைவரை, மக்கள் தொண்டனை நாம் இழந்து நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அன்னார் காட்டிய சாரணிய வழியில் மனித நேயத்துடன் வாழ்வோமாக. வாழ்க அவர் புகழ், வாழ்க சாரணியம்.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

**Suren Sornalingam BBA**

Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# சாம்பல் மேட்டு அரசியல்

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து அரவிந்தன்**

இரண்டு நாட்களுக்கு முன், நாம் வழமையாகச் சிற்றுண்டி வாங்கும் கடைக்குச் சென்றேன். சமூக நிலவரங்களை அறிவதற்காகப் பொதுவாகவே நான் பல்வேறு தரப்பினரோடும் உரையாடுவது வழக்கம். இது தேர்தல் காலம் வேறு. என்பதால், தேர்தலைப் பற்றிச் சனங்கள் என்ன சொல்லுகினம்? என்று கடைக்காரரிடம் கேட்டேன்.

ஒவ்வொருதரும் ஒவ்வொரு மாதிரிக் கதைக்கினம். கொஞ்ச நாளுக்கு முதல்ல சஜித்துக்கும் ஜே.வி.பி (அநுர)க்கும்தான் போட்டி எண்டமாதிரிக் கதையிருந்துது. இப்ப ரணிலுக்கும் சஜித்துக்கும ˙தான் போட்டி போலக் கிடக்கு என்றார்.

ஏன் அநுரவுக்கும் செல்வாக்கு இருக்கெண்டு தானே வெளியில கதையிருக்கு? என்றேன்.

அதைப் பற்றிச் சரியாத் தெரியாது. ஆனால், நம்மட்ட வாற ஆக்கள் ரணிலைப் பற்றியும் சஜித்தைப் பற்றியும் தான் கதைக்கினம் என்றார்.

அப்பிடியெண்டால் நீங்கள் என்ன முடிவில இருக்கிறியள்? எனக் கேட்டேன்.

இன்னும் நாட் கிடக்குத் தானே! பொறுத்துப் பாப்பம் எனச் சொன்னார்.

நானும் விடவில்லை. தமிழ்ப்பொது வேட்பாளர் எண்டு ஒருத்தர் நிறுத்தப் பட்டிருக்கிறாரல்லோ! அதைப் பற்றி ஆட்கள் என்ன கதைக்கினம்? நீங்கள் என்ன சொல்லுறியள்? தொடர்ந்து கேட்டேன்.

அதைப் பற்றிச் சிலர் கதைக்கினம் தான். ஆனால், நான் என்ன சொல்லிறது? உங்களுக்கு ஒண்டைச் சொல்லட்டே. உங்களிட்டக் கொஞ்சக் காசிருக்கெண்டு வையுங்கோ. அந்தக் காசை என்ன செய்வீங்கள்? ஏதாவது உருப்படியான வேலையைச் செய்யப் பயன்படுத்துவீங்கள். அல்லது தேவையான பொருள் எதையும் வாங்குவீங்கள். இல்லா விட்டால், சொந்த பந்தங்களுக்குக் குடுத்து உதவுவீங்கள். அதுமில்லா விட்டால், ஆராவது உதவி தேவைப்படுகிற ஆட்கள், கஸ்ரப்பட்ட சனங்களுக்குக் குடுப்பீங்கள். ஒண்டுமில்லையெண்டால் கோயில் உண்டியல்லயாவது போடுவீங்களல்லோ. சும்மா றோட்டில போட மாட்டீங்கள் தானே..! என்றார். இதற்கு மேல் நான் எதுவும் கேட்க வேண்டியிருக்கவில்லை.

தமிழ்ப்பொது வேட்பாளர் விடயத்தைப் பற்றி நாம் அதிகமாகப் பேச வேண்டியதில்லை. அதற்காக நேரத்தைச் செலவழிப்பது வீண். இருந்தும் அதைப் பற்றி ஏன் பேசவேண்டியிருக்கிறது என்றால் —

பொதுவேட்பாளர் வந்து விட்டார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் யாருக்காக?

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய இரண்டு (ரணில் — அரிய நேந்திரன்) சுயேட்சை வேட்பாளர்கள்

தமிழ் மக்கள் தாங்கள் யாரென்பதைக் காட்டுவார்கள் தமிழ் மக்கள் வழி காட்டுவார்கள்

1989 இல் ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர்கள் பெற்ற வெற்றியைப் போல இப்போதைய தமிழ்ப்பொது வேட்பாளரும் வாக்குகளை அள்ளுவார்!

போன்ற கருத்துகளை முன் வைத்துச் சனங்களைத் திசை திருப்ப முற்படுவதை காணும் போது பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. காரணம், அத்தனையும் தவறான புரிதலின் அடிப்படையிலானவை. இவை ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கூடப் பார்க்கலாம்.

1. பொதுவேட்பாளர் வந்து விட்டார் என்றால் அவரென்ன வானத்திலிருந்து குதித்தாரா? அல்லது வாராது வந்த மாமணியா? (இப்படித்தான் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனையும் தமிழ் மக்களின் மீட்பர், தமிழ்ச் சமூகத்துக்கு வராது வந்த மாமணி என்றார்கள்! இறுதியில் அரசியலில் அரிச்சுவடியே தெரியாதவர் என்பதை அவரே நிரூபித்தார்). அரியநேந்திரனைப் பொது வேட்பாளராக நிறுத்தியதற்குத் தான் இந்தப் பெரிய அமர்க்களமா? மலையகத்தில் மல்லியப்பு திலகர் என்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜீம் தான் போது வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவரும் மலையக மக்களை, அவர்களுடைய பிரச்சினையை வெளிப்படுத்துவதற்காகவே போட்டியிடுகிறார். இரண்டையும் சமப்படுத்த முடியாது என்று சிலர் சொல்லக் கூடும். இலங்கையில் எண்ணிக்கையில் சிறு பான்மையினராக இருக்கும் சிங்கள வரல்லாத தேசிய இனங்களுக்கு ஒடுக்குமுறையும் அது சார்ந்த பிரச்சினையும் உண்டு.

அப்படியென்றால், தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்புகள் இணைந்து ஏன் ஒரு பொது வேட்பாளரை அடையாளமாக முன்னிறுத்தவில்லை. அதற்கு ஏன் முடியாமற் போனது? மெய்யாகவே சிங்களத் தரப்புக்கு நெருக்கடியைக் கொடுப்பதாகவும் சர்வதேச சமூகத்துக்கு சிங்கள ஒடுக்குமுறையை வெளிப்படுத்துவதாகவும் இருந்தால் அதைத்தான் செய்திருக்க வேண்டும். அதை விடுத்து, இப்படி அரியநேந்திரனைக் கொண்டு வந்து நிறுத்துவதல்ல. பொதுவேட்பாளர் என்பதற்கான அர்த்தம் ஓரளவுக்கு அப்பொழுதுதான் பொருந்தும். இது பொதுவேட்பாளரேயல்ல. தமிழ் வேட்பாளர். அதிலும் ஒருசாராருடைய தரப்பின் வேட்பாளர். அவ்வளவு தான்.

2.தமிழ்ப் பொதுவேட்பாளர் யாருக்காக? என்றால் நிச்சயமாக பொதுச் சபையினருக்கும் பொதுச்சபையினரின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பினருக்கும் தான். அவர்களுக்குப் பின்னின்று இயங்கும் சக்திகளின் விருப்பத்துக்குமாக. அதாவது இந்தத் தரப்பினருடைய தேவைக்காகவே தமிழ்ப் பொது வேட்பாளரும் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாடும். இதற்குக் காரணம், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற கட்டமைப்புக்குள் தங்களுடைய செல்வாக்கு மண்டலத்தை விஸ்தரிப்பதற்கு பொதுச்சபையைச் சேர்ந்தவர்களிற் சிலர் கடந்த காலத்திற் கடுமையாக முயற்சித்தனர். இதற்காக இவர்கள், ஒரு கட்டம் வரையில் மறைந்த சம்மந்தனுடன் கூட நெருக்கமாகப் பழகியதுமுண்டு. அவருடைய மேடைகளிலும் நிகழ்ச்சிகளிலும் தம்மைப் பகிர்ந்ததுண்டு. ஆனால், என்னதான் நெருக்கம் காட்டினாலும் எப்படி அறிவுரை சொன்னாலும் எதற்கும் மசியாத சம்மந்தனுடைய நிலைப்பாட்டினால் இறுதியில் கசப்படைந்தனர்.

அந்தக் காய்ச்சலில் சிறிது காலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் சம்மந்தனையும் வழிக்குக் கொண்டு வருவதற்காக பழி தீர்ப்பதற்காக தமிழ்த் தேசியப் பேரவையை உருவாக்கினர். இரண்டாண்டுகளில் பேரவை சத்தமில்லாமற் படுத்து விட்டது. பிறகு, கஜேந்திரகுமார் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியோடு சமரசத்துக்கு முயற்சித்தனர். ஒரு எல்லைக்கு அப்பால் இவர்களை உள்ளே நுழைவதற்கும் தலையீடுகளைச் செய்வதற்கும் கஜேந்திரகுமார் அனுமதிக்கவில்லை.



இதனால், விக்னேஸ்வரனைச் சாரத் தொடங்கினார். விக்னேஸ்வரனும் இவர்களுடைய கட்டுக்குள் நிற்கும் ஆளாகத் தெரியவில்லை என்றவுடன் தொடங்கப்பட்டதே தமிழ் மக்கள் பொதுச்சபையாகும். இப்பொழுது தமிழ் மக்கள் பொதுச்சபையானது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற பேரில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலிருந்து (தமிழரசுக் கட்சியிலிருந்து) பிரிந்து சென்ற ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கின்றது.

ஏற்கனவே இந்தக் கட்சிகள் பொதுச் சபையினரின் கட்டுப்பாட்டுக்குள் பாதிக்கு மேல் வந்து விட்டனர். வரும் நாட்கள் இதை மேலும் நிரூபிக்கும். ஏனென்றால், சம்மந்தன், சுமந்திரன் போலச் சுயாதீனமாகச் சிந்திக்கக் கூடிய, தலைமைத்துப் பண்புடைய ஆளுமைகளாக குறித்த கட்சியினர் இல்லை. என்பதால் பொதுச்சபையின் கட்டுப்பாட்டுக்குள் நிற்பது தவிர்க்க முடியாமற்போகும்.

3.நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய இரண்டு (ரணில் — அரிய நேத்திரன்) சுயேட்சை வேட்பாளர்கள் என்பது. இதைப் படிக்கும் போது சிரிப்புத் தான் வருகிறது. சுயேட்சை வேட்பாளர்கள் இருவர் என்பது சரியானதே. ஆனால், இருவரையும் சமனிலைப்படுத்திப் பார்ப்பது தவறு. அநேகமாக வடக்குக் கிழக்கில் அரிய நேத்திரனை விட ரணில் விக்கிரம சிங்கவுக்கு அதிக வாக்குகள் கிடைக்கவும் கூடும். அப்படியென்றால் நிலைமை? ரணில் தேர்தலில் தோற்றுப் போனால்? அதற்குப் பிறகு நாட்டின் தலைவிதி? சரி, அரியநேத்திரன் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றால், அதற்குப் பிறகு என்ன அதிசயங்கள், அற்புதங்கள் எல்லாம் நடக்கும்? அதைத் திட்டவட்டமாக பொதுச் சபையினரோ, பொதுக்கட்டமைப்பினரோ, அரியநேத்திரனை ஆதரிப்போரோ சொல்வார்களா?

இந்த மாதிரி மிகைப்படுத்தப்பட்ட கற்பனைகளோடு தமிழ்ச்சனங்களை உச்சிக் கொப்பில் ஏற்றிய கதைகள் பலவுண்டு. ஒவ்வொரு தடவையும் கொப்பு முறிந்து விழுந்து இடுப்பு உடைந்ததே மிச்சம்.

4.தமிழ் மக்கள் தாங்கள் யாரென்பதைக் காட்டுவார்கள் என்பது. நிச்சயமாக இதை ஏற்றுக் கொள்ளலாம். ஏனென்றால் தமிழ் மக்கள் அப்படித்தான் ஆக்கப்பட்டுள்ளனர். இல்லையென்றால் தங்களுக்கு எந்த நன்மைகளையும் செய்யாத, மக்களிடத்திலும் சூழலிலும் எந்த முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாத, எந்த நெருக்கடியையும் தீர்க்காதவர்களையெல்லாம் இன்னும் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்வு செய்து கொண்டிருப்பார்களா?

அடுத்தது, தமிழ் மக்களிடத்தில் புதிதாகச் சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தெடுப்போரை விட, பழைய பாதையில் பயணிப்போரையே அவர்களுக்கு அதிகமாகப் பிடிக்கிறது. என்பதால் இனரீதியாக அடையாளப்படுத்தப்படும் எந்த விடயமும் அவர்களிடத்தில் சட்டெனப் பற்றி எரியும். தமிழ்ப்பொது வேட்பாளர் என்பது அப்படிப் பற்றி எரியக் கூடிய ஒரு சங்கதி. ஒரு பொருளே! ஆகவே தமிழ் மக்கள் அவரை ஆதரித்தோ கொண்டாடியோ தீருவர். அதன் விளைவுகள் எப்படியென்று பார்க்கவே மாட்டார்கள். காலம் கடந்த பிறகு வரும் ஞானத்தினால் பிறகு தான் கவலைப்படுவார்கள். ஆகவே வழமையைப் போலத் தாம் முன்னுணரக் கூடியவர்களில்லை என்பதைக் காட்டுவர்.


5.தமிழ் மக்கள் வழிகாட்டுவார்கள் என்றால், யாருக்கு வழிகாட்டுவார்கள்? எதற்கு வழிகாட்டுவார்கள்? அந்த வழி எத்தகையதாக இருக்கும்? அது எங்கே செல்லதற்கானதாக இருக்கும்? இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிகாட்டுவார்களா? அப்படியென்றால் அது எத்தகைய வழி? அந்த வழியை சர்வதேச சமூகமும் இந்தியாவும் சிங்களத் தரப்பும் முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்வார்களா? மனோ கணேசனே வெளிப்படையாகச் சொல்லி விட்டார்,

உந்த விளையாட்டை எல்லாம் வடக்குக் கிழக்கிற்குள் வைத்துக் கொள்ளுங்கள். தெற்கிற்கோ கொழும்புக்கோ மலையகத்துக்கோ கொண்டு வர வேண்டாம். அது வேறு உலகம் என்று. ஆகவே தமிழ் மக்கள் வழி காட்டுவார்கள் என்று சொல்லித் தாம் தப்புவதற்கு பொதுச்சபையினரும் பொதுக்கட்டமைப்பிலுள்ள கட்சியினரும் முயற்சிக்கலாம். அது வரலாற்று நகைப்புக்குரிய ஒன்றேயாகும்.


6.1989 இல் ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர்கள் பெற்ற வெற்றியைப் போல இப்போதைய தமிழ்ப்பொது வேட்பாளரும் வாக்குகளை அள்ளுவார்! என்பது. இவ்வாறு இப்பொழுது சொல்வோர், அன்று ஈரோஸ் அமைப்பையும் அதனுடைய அன்றைய நிலைப்பாட்டினையும் அது தேர்தலில் நின்றதையும் கடுமையாக மறுதலித்தோரே. சரி, அந்தத் தவறைப் பின்னாளில் உணர்ந்தவர்கள் என்றாலும் அந்தச் சூழலையும் அந்த அமைப்பையும் இன்றைய நிலையோடு தொடர்புறுத்திப் பார்ப்பது தவறு. அப்படிப் பார்க்கவே முடியாது. காரணம், அது போராட்டம் நடைபெற்ற காலம். போட்டியிட்டவர்களும் போராளிகள். என்பதால் தான் மக்களும் அந்த நெருக்கடிச் சூழலிலும் அன்றைய சுயேட்சைகளுக்கு வாக்களித்தனர். மக்களுடைய அந்த நம்பிக்கைக்கு மதிப்பளித்து, அடுத்து வந்த

(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே1 எல்லா வற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். கொடுக்கல் வாங் கலில் இருந்த பிரச்னை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளி யூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதக மாக இருக்கும். தொழில் வியாபாரம் லாப கரமாக நடக்கும். உத்யோகத்தில் மேலதி காரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்பை பெறு வீர்கள்.




ரிஷபராசி அன்பர்களே! தடை பட்டு வந்த காரியங்கள் சாதக மாக நடந்து முடியும். எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி கள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர் கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேலதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திரு மணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல் படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவன த்துடன் வைப்பது நல்லது. தொழில் வியா பாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக் கும். எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக் கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது.





கடகராசி அன்பர்களே! ஆராய் ந்து செய்யும் காரியங்கள் சாதக மான பலன் தரும். ஆயுதங்கள் கையாளும் போதும் வாகனங் களை ஓட்டும் போதும் எச்சரி க்கை அவசியம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக் கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களு க்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள்.





சிம்மராசி அன்பர்களே! மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென் றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். உத்யோகத்தில் இருப் பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேலதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது.




கன்னிராசி அன்பர்களே! எதிலும் முன்னேற்றம் காணப்படும். உடல் ஆரோக்கியம் பெறும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். தொழில் வியாபாரத்தில் முன்னே ற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்பட வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல் படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இரு ந்த பிரச்னை குறையும்.





துலாம்ராசி அன்பர்களே! ஏதா வது ஒரு வகையில் நன்மை நடை பெறும். மற்றவர்கள் செய்கைகளால் மனவருத்தம் உண்டாகலாம். நீண்டநாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின்தங்கிய நிலை மாறும். உத்தி யோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேல் அதிகாரிகளின் பாராட்டு களை பெறுவார்கள்.குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும் சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்னை தலை தூக்க லாம்.





விருச்சிகராசி அன்பர்களே! குறிக் கோள் இன்றி வீணாக அலைய நேரிடும். செலவும் அதிகரிக்கும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோதைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணி புரிவார்கள். சிலருக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள்.








தனுசுராசி அன்பர்களே! காரியங் களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தை க்கு வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது. உங்களது உடமைகளை கவனமாக பார் த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப் படும்.




மகரராசி அன்பர்களே! பல வகைகளிலும் நன்மை உண்டா கும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பணவரத்து அதிகரிக் கும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். `. கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். தொழிலில் மரியாதையும். அந்தஸ் தும் அதிகரிக்கும். அரசாங்கம் தொடர் பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும்




கும்பராசி அன்பர்களே! காரியத் தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரி யத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர் கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக் கும். வீண்கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பார் ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது




மீனராசி அன்பர்களே! எதிர் பார்த்த காரிய வெற்றி உண் டாகும். புத்திசாதுரியத்தால் எதையும் செய்து முடிக்க முடி யும். அனுபவபூர்வமான அறிவுத்திறன் கை கொடுக்கும். பணவரத்து தாமதப்படும். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மைதரும். தொழில் வியா பாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். உத்தியோகத்தில் இருப்ப வர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சாம்பல் மேட்டு அரசியல்

(21ம் பக்கத் தொடர்ச்சி) பொருத்த மற்ற சூழலில் தங்களுடைய பதவி களைத் துறந்தனர் தேர்வு செய்யப் பட்ட பிரதிநிதிகள். இவர்களோ (அதா வது பொதுக்கட்டமைப்பில் உள்ள கட்சியினரோ) நெருக்கடிகளை உரு வாக்கியவர்கள் மட்டுமல்ல, இறுதிப் போர்க்காலச் சூழலில் தம்முடைய பதவியை விடாது இறுகப் பற்றிக் கொண்டிருந்தவர்கள். தவிர, இன்றைய சூழலானது பல தெரிவுக்குரியது மட்டுமல்ல, யார் மீதும் நம்பிக்கை கொள்ளக் கூடியதுமல்ல. மட்டுமல்ல, பொதுவேட்பாளரை நிறுத்தும் தரப்பு கள் ஒன்றும் மக்களிடம் மாபெரும் செல்வாக்கைப் பெற்றவையும் அல்ல. அதில் உள்ள ஒரு தலைவராவது அனைத்துத் தமிழ் மக்களையும் ஒரு நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு அறிவிப்பையேனும் செய்து காட்டட் டும் பார்ப்போம். ஆகவே இந்தக் கருத்தை ஏற்கவே முடியாது. ஆனால், சிங்கள இனவாதத்துக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதற்காக மக்கள் இயல் பாக வாக்களிக்க முற்படலாம்.என்பதால் மேற்படி வார்த்தைகளைப் படிக்கும் போது பாரதியின் பாடல் வரிகள் நினைவில் எழுகின்றன.

நெஞ்சு பொறுக்குதில்லையே — இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்… உண்மையில் நெஞ்சு பொறுக்குதில்லைத் தான்.

சொந்த மக்களையே வைத்துச் சூதாடு வதைக் கண்டு எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்?

இதற்கு இவர்களுடைய மேலுமொரு உதாரணத்தைச் சொல்லுவது பொரு த்தமாகும்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் விடுத லைப்புலிகள் இயக்கம் அதாவது தமிழ்த் தரப்பு எடுத்த முடிவானது முன்பு (1939 இல்) யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் எடுத்த முடிவு போலவே செயல்முனைப்பானது. தேர்தலை தமிழ் நோக்கு நிலையில் இருந்து தந்திரோ பாயமாக அணுகுவது என்று ஒரு ஒப்புவமை சொல்லப்படுகிறது. போதா தென்று அந்த பகிஷ்கரிப்பின் (2005 இல் மேற்கொள்ளப்பட்ட) விளைவுகள் தமிழ் அரசியலின் மீது மட்டும் தாக் கத்தைச் செலுத்தவில்லை. அதற்குமப் பால் தென்னிலங்கை அரசியல், இந்தப் பிராந்திய அரசியல் என்று பல்வேறு பரிமாணங்களில் அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் அமைந்தன. அவற்றின் தொடர்ச்சிதான் இப்பொழுதுள்ள அரசி யலும் என்று வேறு சொல்லப்படுகிறது.

ஈஸ்வரா! 2005 இல் மேற்கொள்ளப் பட்ட பகிஸ்கரிப்பின் விளைவுகள் தான் முள்ளிவாய்க்கால் முடிவுகளும் துயர மும் கூட. இவர்கள் எதைச் சொல் கிறார்கள்? என்ன எண்ணுகிறார்கள்? இதொன்றும் சாம்பல் அரசியல் அல்ல. சாம்பல் மேட்டு அரசியல்.

# ஜே.வி.பி செட்டை கழற்றிய நாகம் ....

(9ம் பக்கத் தொடர்ச்சி) 6. வடக்கு, கிழக்கில் நிர்வாகத்தில் மொழியுரிமை பேணப்படும். இவையே வடக்கு, கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்கள் கவனம் செலுத்தக்கூடிய முன்மொழிவு கள் எனலாம்.

இந்த தேர்தல் அறிக்கை வெளியிடப் பட்ட பின்னர் ஜே.வி.பி –என்.பி.பி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க அளித்த பேட்டி ஒன்று தனது தேர்தல் உறுதிமொழியை தானே மறுதலிப்ப ாக உள்ளது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு ள்ளவர்களையும், மனித உரிமைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு உள்ளவர் களையும் தேசிய மக்கள் சக்தி தண்டி க்க முயற்சிக்காது என்று குறிப்பிட்டு ள்ளார். இந்த கருத்து சிறுபான்மை தேசிய இனங்களுக்கான மேற்கூறிய உறுதி மொழிகளில் அதிகமான வற்றை மறுதலிக்கிறது. இது தான் முடிவு என்றால் போடப்பட்டுள்ள பட்டியல் வெறும் கண்துடைப்பு. இவற்றில் அதிகமானவை மனித உரிமைகள் சார்ந்தவை.

இந்தியாவை அச்சுறுத்த அனுமதி யோம் என்று சொல்லும் அளவுக்கு 'சேவகம்' செய்ய ஜே.வி.பி. தயாராகி விட்டது. இது விடயத்தில் தென்னில ங்கை வலதுசாரிகளின் நிலைப்பாட் டையே அதுவும் கொண்டுள்ளது. இந்திய நலன்களை பாதுகாக்க ஒத்து ழைத்து தமிழ், முஸ்லீம் மக்களின் உரிமைப் பிரச்சினையில் இந்தியாவை தூரத்தில் வைத்தல். பௌத்த –இந்து த்துவ உறவை முதன்மை படுத்து கின்ற வெளிநாட்டு கொள்கையை தொடரல்.

இதனால் தான் அநுரகுமாரவை இரண்டாம் கோத்தபாய என்று கூற வேண்டி உள்ளது. இந்தியா அநுர குமாரவை கூப்பிட்டு கதைத்த போது இருந்த தேர்தல் களநிலை இப்போது இல்லை. அந்த நேரத்தில் அநுரகுமார முதல் நிலையில் இருந்தார். இப்போது அநுரவுக்கான ஆதரவு வீழ்ச்சியடைந் துள்ளது. இந்தியா மற்ற இருவரில் ஒருவரை தேடுகிறது. இதற்காகத் தான் இந்தியாவின் பாதுகாப்பு பற்றி ஜே.வி.பி.யின் தேர்தல் அறிக்கை பேசு கிறது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், அடக்கு முறை சட்டங்கள் மனித உரிமைகள் சார்ந்தவை. அரசியல் கைதிகள் விவகாரம் மனித உரிமைகள் சார்ந்தது. மொழியுரிமை அடிப்படை மனித உரிமை. இந்த வகையில் மனித உரிமைகள் மீறல் குற்றச் சாட்டுகளு க்கு நீதி கிடைக்க வழி செய்யாது யார் மீறியிருக்கிறார்கள், யார் மீறவில்லை என்றும், யார் போர்க் குற்றங்களை செய்தார்கள், யார் செய்யவில்லை அல்லது யார் அதிகம் செய்தார்கள், யார் குறையச் செய்தார்கள் என்று அவற்றிற்கு பொறுப்பானவர்களை வெளிப்படுத்துவதற்கு மட்டும் விசார ணைக் குழுக்கள் எதற்கு?

நீதியற்ற விசாரணை. போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்களுக்கு பின்னால் ஜே.வி.பி. யும் இருக்கிறது. கொலைகளுக்கு பின்னாலும் ஜே.வி.பி. இருக்கிறது . இரண்டாம் கிளர்ச்சி காலத்தில் ஜே.வி.பி. அதிகளவான இடதுசாரிகளை கொலை செய்திருக் கிறது. இதனால் தான் இப்படிச் சுத்து கிறார்கள்.

'நாட்டின் தேசிய சொத்தை கோயில் சொத்து போன்று' பாதுகாப்பேன் என்று ஒரு இடதுசாரி கட்சியின் (?) தலைவர் கூறும் அளவுக்கு ஜே.வி.பி. யின் நிலையுள்ளது. ஊழல்கள் நிறை ந்த இடங்கள், கோயில் சொத்தை சூறையாடும் இடங்களாக அனைத்து மத கோயில்கள் இருக்கின்றன. இந்த நிலையில் இவர்களிடம் இருந்து எதனை எதிர்பார்க்க முடியும்?

ஆக, மொத்தத்தில் ஜே.வி.பி. ஒரு மாற்றும் அல்ல, மாற்றமும் அல்ல. வேண்டுமானால் இடது 'செட்டை யில்' வலதுக்கான ஒரு பதிலீடு மட்டுமே. மகிந்தவை, சிறிசேனவை, கோத்தபாயவை, ரணிலை பதிலீடு செய்கிறார் அநுரகுமார திசாநாயக்க அவ்வளவு தான்.

அநுரகுமார திசாநாயக்க வெற்றி பெற் றால் அது பலாப்பழத்தை பழுக்க வைக்க முள்ளைப் பிடுங்கி கட் டையை அடித்த கதையாகும். தமிழ், முஸ்லீம் சிறுபான்மை தேசிய இனங் கள் அரசனை நம்பி புருஷனை கை விட மாட்டார்கள் என்று நம்புவோம்.

# SASITHARAN LAW

PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**

*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate

- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law

- Divorce
- Custody & Support

## Estate Law

- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law

- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law

- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6

Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**

- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# தமிழரசுக்கட்சி சஜித்துக்கு ஆதரவு!

ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதுடன், பொதுவேட்பார் அரியநேந்திரன் போட்டியில் இருந்து விலக வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.




இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் 01 செப் 2024 ஞாயிற்றுக் கிழமை பல மணி நேரமாக வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம் பெற்றது. அதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்

மத்திய குழுக் கூட்டம் பல மணி நேரமாக இடம் பெற்றது. இதில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பா.அரியநேந்திரன் அவர்களை ஆதரிப்பதில்லை என தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. அத்துடன் எமது கட்சி உறுப்பினராகிய அரியநேந்திரன் ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகுமாறு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் 2024 இல் சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதாக தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது. இதுவரை எமது கட்சி தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாக செயற்பட்டனர். தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஆதரவளிப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சி தனக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளமைக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்பிரேமதாச நன்றியை தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர் நாங்கள் இணை




ந்து அனைவரும் வெற்றி பெறும், இன வெறியில்லாத பாரபட்சம் இல்லாத எதிர்காலத்தை உருவாக்குவோம் என தெரிவித்துள்ளார். ஐக்கியம் வலுவை பகிர்ந்து கொள்ளப்பட்ட நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத்தை உருவாக்குவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### அறிவுரை வழங்கிய பீரிஸ்

தமிழ் பொது வேட்பாளருக்கு முதலாவது வாக்கை செலுத்தி இரண்டாவது வாக்கை சஜித் பிரேமதாசவிற்கு செலுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட குழுவினர் கூறியதாக யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர் யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

நடைபெற இருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தமிழ் பொது வேட்பாளருக்கு ஏன் ஆதரவு வழங்கியுள்ளது என்பது தொடர்பாக வருகை தந்தவர்களுக்கு தெளிவுபடுத்தியதாக யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

அதற்கு பதில் வழங்கிய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நீங்கள் விரும்பியது போன்று தமிழ் பொது வேட்பாளருக்கு உங்களுடைய முதலாவது வாக்கை செலுத்தி இரண்டாவது வாக்கை சஜித் பிரேமதாசவிற்கு செலுத்துங்கள் என்று கூறியதாக இ.ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் யாழ்ப்பாண வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரம், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாண வணிகர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

